விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 கார்த்திகை 04 புதன்கிழமை (19.11.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 336




## நாயாறு கடற் பிரதேசத்தில் புலிகளின் படகுகள் மீது தாக்குதல்

### பாதுகாப்பு அமைச்சு தகவல்

(கொழும்பு)

முல்லைத்தீவு நாயாறு கடற்பிரதேசத்தில் நேற்று அதிகாலை கடற்புலிகளின் இரண்டு படகுகளைக் கடற்படையினர் மூழ்கடித்ததாகப் பாதுகாப்பு அமைச்சுத் தெரிவித்துள்ளது.

முல்லைத்தீவு நாயாறு கடற்பிரதேசத்தில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட கடற்படையின் விசேட படகுப் படையணி எதிர்பாராமல் சந்தித்த கடற்புலிகளின் ஏழு படகுகள் மீது தாக்குதல் நடத்தியுள்ளது.

இந்தத் தாக்குதலின்போது கடற்புலிகளின் இரண்டு படகுகள் முற்றாக அழிந்து நீரில் மூழ்கியதாகத் தெரிவிக்கப்படுகின்றது. புலிகளின் படகுகளின் கட்டளைப் படகுக்கும் இந்தத் தாக்குதலின்போது சேதம் ஏற்பட்டுள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.முன்னரங்க நிலைகளில் மும்முனைகளில் தாக்குதல்

### 36 படையினர் பலி-புலிகள் அறிவிப்பு

(கிளிநொச்சி)

யாழ்.வடபோர் முனையில் மும்முனைகளில் படையினர் மேற்கொண்ட முன்னகர்வுகள் தமிழீழ விடுதலைப்புலிகளால் முறியடிக்கப்பட்டுள்ளன.


இதில் 36 படையினர் கொல்லப்பட்ட னர். 90 ற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர். இது தொடர்பில் தமிழீழ விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளதாவது,

கிளாலி, முகமாலை, கண்டல் பகுதிகள் ஊடாக நேற்றுக் காலை 5.30 மணியளவில் படையினரின் 53, 55 ஆம் டிவிசன் படையணிகள் மும்முனைகளில் முன்னகர்வுகளை மேற்கொண்டன.

படையினர் பின்தளங்களிலிருந்து செறிவான பல்குழல்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# யுத்தத்தை நிறுத்துவதற்கான சூழல் இன்னமும் ஏற்படவில்லை



## ரணில் புதுடில்லியில் தெரிவிப்பு

(புதுடில்லி)

தற்போதுள்ள நிலையில் இலங்கையில் போரை நிறுத்துவதற்கான வாய்ப்பில்லை. அங்கு அரசியல் தீர்வு காண வேண்டும் என்பது தான் எங்கள் எண்ணம். இது பற்றி நாங்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கூறியிருக்கின்றோம். இந்தப் பிரச்சினைகள் தொடர்பாகப் பிரதமர் மன்மோகன் சிங், வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி ஆகியோரைச் சந்தித்துப் பேச நேரம் கேட்டிருக்கின்றேன் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க புதுடில்லியில் தெரிவித்துள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.இளைஞரை கொழும்பில் காணவில்லை

(கொழும்பு)

வெளிநாடு செல்வதற்காகக் கொழும்பில் தங்கியிருந்த இளைஞர் ஒருவரைக் காணவில்லை என மனித உரிமைகள் ஆணைக் குழு யாழ். அலுவலகத்தில் முறையிடப்பட்டுள்ளது.

மத்திய கிழக்கு நாடான டோகாவில் இருந்து திரும்பி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பரந்தனில் நேற்று கிளைமோர்த் தாக்குதல்

(கிளிநொச்சி)

பரந்தனிலிருந்து 5 கிலோமீற்றர் வடக்கே புளியங்குளத்திலுள்ள நெடுங்குள வீதியில் நேற்றுக் காலை 8.45 மணியளவில் இடம் பெறற ஆழஊடுருவும படையணியின் கிளைமோர்த் தாக்குதலில் 3 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதாக விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

இத் தாக்குதலில் மருமேந்திரராசா நகுலேஸ்வரன் (வயது-12) அவருடைய தந்தையான மருமேந்திரராசா மற்றும் கருணாகரன் (வயது-34) ஆகிய மூவருமே படுகொலை செய்யப்பட்டவர்கள் ஆவர்.

இத் தாக்குதலில் வாகனத்தில் பயணித்த புஸ்பா மருமேந்திரராசா மற்றும் வாகன ஓட்டியான முருகன் ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ச-5)

# புலிகளைத் தடை செய்ய அரசாங்கம் தீர்மானம்

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் விடுதலைப்புலிகள் அமைப்பைத் தடை செய்யவுள்ளதாக பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க கூறியிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

விடுதலைப்புலிகளைத் தடை செய்யுமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுப்பதற்கு முன்னர் அரசாங்கம் தடை செய்து விடும் என பிரதமரை மேற்கோள்காட்டி பிரதமர் அலுவலக அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

தற்பொழுது நாடு இருக்கும் நிலையில் எந்தவொரு பிரஜையும் தனிநாடு கோர முடியாது எனவும் பிரதமர் தெரிவித்துள்ளார். பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கும் நாட்டை நல்ல வழியில் ஆட்சி செய்வதற்கும் மக்கள் எமக்கு சந்தர்ப்பம் வழங்கியுள்ளனர்.

மக்களின் வேண்டுகோளுக்கு அமைய மாவிலாறு முதல் மனிதநேயப் பணிகளை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது. மோதல்களில் விடுதலைப்புலிகளுக்குப் பாரிய பின்னடைவுகள் ஏற்பட்டுள்ளபோதும் புலிகளின் தலைமைத்துவம் பொறுப்பான முறையில் செயற்படவில்லை என அகலவத்தையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பிரதமர் குற்றஞ் சாட்டியிருந்தார்.

அவர்கள் இவ்வாறு தொடர்ந்தும் செயற்பட்டால் அரசாங்கம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தேசியப் பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வு

### அமைச்சர் றோகித மன்றில் உரை

(கொழும்பு)

பயங்கரவாதத்தை எதிர்கொள்ளும் அதே வேளை நாட்டின் தேசியப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்காகவே தாம் செயற்படுவதாகவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தொடர்ந்து கூறி வந்துள்ளார் என்று வெளிவிவகார அமைச்சர் றோகித போகொல்லாகம நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார்.

வரவு-செலவுத் திட்டத்தின் வெளிவிவகார அமைச்சின் நிதி ஒதுக்கீடு தொடர்பான குழு நிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

இதற்கான

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அரியநேந்திரன் எம்.பியிடம் புலனாய்வுத்துறை விசாரணை

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பாக்கியசெல்வம் அரியநேந்திரன் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை 10.30 மணியிலிருந்து சுமார் 5 மணித்தியாலம் விசாரணை இடம் பெற்றதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அண்மையில் ஜேர்மனியில் நடைபெற்ற பொங்குதமிழ் நிகழ்வில் அரியநேந்திரன் ஆற்றிய உரை குறித்து பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் விசாரணை செய்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று காலை பயங்கரவாதத் தடுப்புத் தலைமை அலுவலகத்திற்கு வருமாறு அழைப்பு விடுவிக்கப்பட்ட போதும் பாதுகாப்புக் காரணங்களினால் நாடாளுமன்ற உறுப்பினர் அரிய

(12 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை அரசு முன்னெடுக்கும் யுத்த நடவடிக்கைக்கு எதிர்ப்பு

## அரசியல் ஆய்வாளர் சோ கருத்து

(சென்னை)

விடுதலைப் புலிகளை நான் பலவாறு விமர்சித்தாலும் விடுதலைப் புலிகளுக்கு எதிராக இலங்கை அரசாங்கம் முன்னெடுத்திருக்கும் இராணுவ நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றேன் என அரசியல் விமர்சகரும் துக்ளக் பத்திரிகையின் பிரதம ஆசிரியருமான சோ.இராமசாமி தெரிவித்துள்ளார் .

தமிழகத்தில் தற்பொழுது இலங்கைத் தமிழர்கள் மீது அனுதாபம் ஏற்பட்டிருந்தாலும் தேர்தலுக்கு அப்பால் அது நீடித்திருக்காது எனவும்; எனினும் இதனைக் கொண்டு மக்கள் வாக்களிக்க மாட்டார்கள் எனவும் அவர் கூறியுள்ளார்.

இலங்கையில் தமிழர்களுக்கு சமாதானம் தேவையென்பதே முதலாவது கோரிக்கையாக இருப்பதுடன் சிங்களவர்களுக்கு வழங்கப்படும் சமமான உரிமைகள் தமிழர்களுக்கும் வழங்கப்பட வேண்டுமென்பது தமிழகத்தின் அடுத்த கோரிக்கையாக உள்ளது என சோ இந்திய ஊடகமொன்றிடம் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளை நான் பலவாறு விமர்சித்திருந்தாலும் விடுதலைப் புலிகளுக்கு எதிராக இலங்கை அரசாங்கம் முன்னெடுத்திருக்கும் இராணுவ நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறேன். பிரச்சினையைத் தீர்ப்பதற்குஇந்திய- இலங்கை ஒப்பந்தம் முழுமையாக அமுல்படுத்தப்படவேண்டும்.

இதன் மூலம் தமிழர்களுக்கு மாகாணசபை அரசாங்கம் உறுதிப்படுத்தப்பட்டு சிங்களவர்களுக்கு சமமான உரிமைகள் வழங்கப்பட்டு சமாதானமான சூழ்நிலையில் இலங்கைத் தமிழர்கள் வாழமுடியும். எனினும் துரதிர்ஷ்ட வசமாக விடுதலைப்புலிகள் இந்தியா- இலங்கை ஒப்பந்தத்தை பாழடித்துவிட்டனர் எனக் கூறினார்

விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் நலன் கருதிச் செயற்படாவிட்டாலும் தாமே தமிழர்களின் ஏகபிரதிநிதிகளாக இருக்க வேண்டும் என்பதற்காக ஏனைய தமிழர்களின் பிரதிநிதிகளையும் அரசியல் தலைவர்களையும் புலிகள் ஒழித்துவிட்டனர் என இராமசாமி கூறினார் .

இந்த நிலையில் விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாக முற்றாக ஒழிக்கப்பட்டால் எந்தத் தலைவர்களும் இல்லாத நிலையில் கைவிடப்பட்டுவிடுவார்கள் என்பதால் இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் இந்தியா தலையிட்டு ராஜீவ்காந்திக்கும் - ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை அமுல்படுத்த அழுத்தம் கொடுக்க வேண்டும் என சோ.இராமசாமி அந்த ஊடகத்திடம் மேலும் தெரிவித்தார் (ச-5)

# பாதுகாப்பு உத்தரவாதமின்மையால் ஓமந்தைக்கு பணிக்குச் செல்லவில்லை

## செஞ்சிலுவைச் சங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

ஓமந்தை சோதனைச் சாவடியில் அனுசரணைப் பணிக்குத் தமது பிரதிநிதிகள் நேற்றுக் காலை செல்லவில்லையென சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள் ளது

மோதலில் ஈடுபட்டிருக்கும் விடுதலைப் புலிகள் மற்றும் இராணுவத்தினரிடமிருந்து பாதுகாப்பு உத்தரவாதத்தைப் பெறமுடியாமல் போனமையாலேயே நேற்றைய தினம் கண்காணிப்புப் பணிகளுக்குச் செல்லமுடியாமல் போனது என சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பேச்சாளர் சரசி விஜயரட்ண குறிப்பிட்டார்

ஓமந்தைச் சோதனைச் சாவடிப் பகுதியில் இரு தரப்பிற்கும் இடையில் இடம்பெற்ற மோதல் சம்பவங்களைத் தொடர்ந்து அங்கு அனுசரணைப் பணியாற்றி வந்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் கடந்த புதன்கிழமை வெளியேறியிருந்ததுடன் கடந்த வெள்ளிக்கிழமை மீண்டும் கடமைக்குத் திரும்பியிருந்தனர்

இந்த நிலையில் பாதுகாப்பு உத்தரவாதம் இல்லாததால் நேற்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் ஓமந்தைச் சோதனைச் சாவடிக்குச் செல்லவில்லை. (ச-5)

# இந்திய பிரதிநிதி ஒருவர் நியமிக்கப்பட்டு இலங்கை பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்படும்

## 1800 ஆண்டுகளில் தமிழ்ப் பண்டிதர் எதிர்வு கூறல்

இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்தாலும் சண்டை சச்சரவுகள் ஏற்பட்ட வண்ணமே இருக்கும் இந்தியாவின் பிரதிநிதி ஒருவர் நியமிக்கப்பட்டு அதன் பின்பு பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்படும் என 1800 ஆண்டுகளில் தமிழ்ப் பண்டிதர் ஒருவர் எழுதிய பண்டைய யாழ்ப்பாணம் என்ற நூலில் உள்ளதாக பலாங்கொட ஆனந்த மைத்ரீய மகாநாயக்க தேரர் செதரிவித்துள்ளார்.

மத்துகம மகிந்த விஜேதிலக்க என்பவர் எழுதிய அப்பட்ட நொபேனென லோக்கய ஹா வெனத் (எங்களுக்கு கண்ணுக்கு எட்டாத உலகமும் வேறு விடயங்களும்) (பக்கம் 137) என்ற நூலில் வணபலாம்கொட ஆனந்த மைத்ரீய மகாநாயக்க தேரர் வடக்கில் நடைபெற்று வரும் யுத்தம் தொடர்பாக சில தகவல்களைத் தந்திருக்கிறார். அதன் விபரம் வருமாறு :

வடக்கு கிழக்கு பிரச்சினை எப்போதோ தீர்க்கப்பட்டிருக்க வேண்டிய ஒன்று. அது இன்று இக்கட்டான சூழ்நிலையை உருவாக்கியுள்ளது.

தொடர்ந்து யுத்தம் மேற்கொள்ளவதால் எவ்வித பயனும் இல்லை. அது பிரச்சினைக்குத் தீர்வும் ஆகாது. நாட்டில் ஒரே நேரத்தில் பல இடங்களில் சிங்களம் - தமிழ் என்ற பேதமின்றி அமைதிக்கான பூஜைகள் நடத்தப்பட வேண்டும். சுயநலம் கருதாது பொதுநலம் கருதி இவ்வாறான பூஜைகளை நடத்துவதால் மனிதனில் குடிகொண்டுள்ள வைரம், குரோதம் ஆகியவை இல்லாது ஒழிந்துவிடும் என்பதே உண்மை. இதனை நல்லறிவுள்ள பண்டிதர்கள் கூட முட்டாள்தனமான செயல் எனக் கூறுவார்கள்.

புலஸ்தி என்று அழைக்கப்படும் ரிஷி ஒருவர் இருந்துள்ளார். அவர் தாம் எழுதியுள்ள ஓலைச்சுவட்டில் 1800 ஆண்டுகளில் தமிழ்ப் பண்டிதர் ஒருவர் பண்டைய யாழ்ப்பாணம் (Ancient Jaffna) என்ற நூலை எழுதியுள்ளார் என குறிப்பிட்டுள்ளார். தமிழ்ப் பண்டிதர் தனது நூலில் வெளியிட்டிருந்த தகவல்கள் சிலவற்றை புலஸ்தி என்ற ரிஷி தனது ஓலைச்சுவட்டில் குறிப்பிட்டிருக்கிறார். இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்தாலும் சண்டை சச்சரவுகள் ஏற்பட்ட வண்ணமே இருக்கும். இந்தியாவின் பிரதிநிதி ஒருவர் நியமிக்கப்பட்டு அதன் பின்பு பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்படும் என அந்த வரலாற்று நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர் அன்று கூறியவற்றில் பல விடயங்கள்இன்று உண்மையாகிக் கொண்டிருக் கின்றன என வணபலாங் கொடை ஆனந்த மைத்ரீய மகாநாயக்க தேரர் தெரிவித்துள்ளார்.

இவற்றை மக்கள் உதாசீனப்படுத்துகின்றனர். ஆனால் அவற்றை முழுமையாகப் புறக்கணிக்க முடியாது. மனதில் ஏற்படும் சில குரோதமான ஆசைகள் எம்மை பாவச்செயல்களில் தூண்டச் செய்வன. அவற்றைக் கட்டுப்படுத்தி எம்மை நாமே நல்வழிப்படுத்த வேண்டுமென்றும் வண தேரர் நல்லுரை வழங்கியிருக்கின்றார். (ச-5)

# ஆசிரியர் கல்வியாளர் சேவை தரம் III இன்று நியமனக் கடிதம் வழங்கப்படும்

இலங்கை ஆசிரியர் கல்வியாளர் சேவை தரம்IIIக்கு முதல் கட்டமாக நியமனம் பெறுபவர்களுக்கான நியமனக் கடிதங்கள் இன்று பொதுச் சேவை ஆணைக் குழுவால் வழங்கப்படுவதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அத்துடன் இலங்கை ஆசிரியர் கல்வியாளர் சேவை தரம்III இற்கு விரைவில் இரண்டாம் கட்டமாக ஒரு தொகுதியினருக்கு நியமனம் வழங்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் கே.முகமெட் தம்பி தெரிவித்தார்.

இந்நிலையில் முதல் கட்டமாக இன்று நியமனம் பெறும் தமிழ் மொழி மூலமாணவர்களின் பெயர் விபரங்கள் கல்வி அமைச்சால் வெளியிடப்பட்டுள்ளது. அவ்வாறு அறிவிக்கப்பட்டவர்களின் விபரம் வருமாறு:

**விசேட கல்வி**

எஸ்.ஆர்.சத்தியேந்திரம்பிள்ளை, எம்.ஆனந்தராஜா, ஜி.சுரேஷன், ஐ.செல்வநாயகம், ஏ.ரவீந்திரன், எஸ்.அந்தோனி தவச்செல்வம், எஸ்.மனோரஞ்சிதன். ஐ.எஸ்.ரசாக் ஏ.எஸ்.முகமட் சதாத்

**முதல்மொழி தமிழ்**

எம்.எஸ்.எம்.முழம்மில், ஆர்.டி.சி.ரூபராணி, என்.அந்தோனி குரூஸ், கே.ஹரிகரசக்தி, பி.பாலகணேசன், வி.புஸ்பவாணி, வி.கணேஸ்வரன், எஸ்.கம்சனந்தி. எம்.கௌரிகாந்தன், கே.தர்மராசா, எஸ்.ராயு, எம்.எம்.ஹரிஸ் மரிக்கார்.

**2ஆம் மொழி- தமிழ்**

எம்.எல்.மொகமட் இர்சாட்.

**விவசாயம்**

கே.செந்தில்குமரன், டி. சுந்தரராஜன், ஈ.சற்குணநாதன்.

**கணிதம்**

எ.குகன், ரி.தவநேசன், எஸ்.சிவலோசனி, பி.பரணிதரன், என்.நாகேந் திரன்.

**கிறிஸ்தவம்**

எம்.சூசைதாசன்.

**இந்துசமயம்**

வி.ஞானச்செல்வி, ரி.கோபால கிருஷ்ணன், எஸ்.லிங்கேஸ்வரி.

(ச-5)

# யாழ். குடும்பஸ்தர் புத்தளத்தில் கடத்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர் புத்தளத்தில் வைத்துப் பொலிஸ் சீருடையில் வந்தவர்களால் கடத்திச் சென்றுள்ளதாக அவரது மனைவி மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ் அலுவலகத்தில் நேற்று முறைப்பாடு செய்துள்ளார்

யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியைச் சேர்ந்த நாகப்பன் அழகர் சுவாமி (வயது-45) என்பவரே கடத்தப்பட்டவராவார். இது குறித்துப் புத்தளம் பொலிஸ் நிலையத்திலும் முறையிடப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

# மாணவர்கள் உட்பட மூவர் ஆயுததாரிகளால் கடத்தல்

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மாணவர்கள் இருவர் உட்பட மூவர் இனம் தெரியாத ஆயுததாரிகளால் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் அவர்களது உறவினர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

கோப்பாய் தெற்கு கட்டப்பிராய் சின்னக்கோயிலடியைச் சேர்ந்த 19 வயதான கணேசமூர்த்தி நிசாந் என்பவரை கடந்த 14 ஆம் திகதி வீட்டில் இருந்தவேளை முற்பகல் 11.30 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இரு ஆயுததாரிகள் கடத்திச் சென்றுள்ளதாக முறையிடப்பட்டுள்ளது.

கடந்த 15 ஆம் திகதி அதிகாலையில் 3 மோட்டார் சைக்கிள்களில் வந்த இனம்தெரியாத ஆயுததாரிகள் 17 வயதான நவரெட்ணம் ஜீவிதன் என்பவரைக் கடத்திச் சென்றுள்ளனர்.

இதேவேளை கோப்பாய் தெற்கு கட்டப்பிராய் சின்னக்கோவிலடிப் பகுதியில் கடந்த 15 ஆம் திகதி குடும்பஸ்தரான மெக்கானிக் ஒருவர் கடத்தப்பட்டுள்ளார். (ச-5)

**பிரத்தியேக வகுப்பு**

**ஆங்கிலம்**

மாணவர்கள், அலுவலர்கள் ஆகிய ஆண், பெண் இருபாலாருக்கும் ஆங்கில இலக்கணம் மற்றும் கதைக்க, வாசிக்க மருதனார் மடத்தில் வகுப்புக்கள் எடுக்கப் படும். தொடர்புகளுக்கு:

A.அமிர்தவர்ஷினி

077 4611367

0602214571 (911)

**ஆனந்தி திருமண சேவை**

**மணமகன் தேவை**

ஆசிரியை:றோமன் கத்தோலிக்கம்; பட்டதாரி; 17.10.1976ல் பிறந்த கிரகபாவம் 17 1/4, ஆயிலிய நட்சத்திரம்; செவ்வாய் தோஷம் இல்லாத, கவர்ச்சிமிக்க; நிறைந்த சீதனமுள்ளவருக்கு பொருத்தமான மணமகனை உள்நாட்டில் மட்டும் விரும்புகின்றோம். நேரடியாகத் தொலைத்தொடர்பு (0212228708); அஞ்சல் மூலமும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி; V.A.சிவராசா, ஆனந்தி திருமண சேவை 56, அம்மன் றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம்: சகல சமூகத்தினருக்கும் திருமணம் நிறைவேற்றப்படும். (உள்நாடு. வெளிநாடு) (915)




நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற யாழ்.பல்கலைக்கழக ஆங்கில விரிவுரையாளர் வ.பரந்தாமன் எழுதிய க.பொ.த.உயர்தர ஆங்கில இலக்கியப் பாடத்திற்கான நூல் வெளியீட்டு விழாவில் ஆங்கில மொழிப் போதனா நிலையத் தலைவர் சு.சுந்தரேஸ்வரன் தலைமையுரையாற்றுவதையும், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் உரையாற்றுவதையும், நூல் வெளியீட்டுரையை ஆங்கிலத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அமிர்தாஞ்சலி சிவபாலனும், மதிப்பீட்டுரையை வருகைநிலை விரிவுரையாளர் கவிஞர் சோ.பத்மநாதனும் நிகழ்த்துவதையும், முதற்பிரதியை ஓய்வுபெற்ற உதவிக்கல்விப் பணிப்பாளர் க.பேரம்பலம் பெற்றுக்கொள்வதையும் படங்களில் காணலாம்.

# இன்று ஒரு தகவல்

## பெரியார்

பெரியார் ஒரு தடவை தன் தங்கையின் வீட்டிற்கு விருந்து சாப்பிடுவதற்காக சென்றிருந்தார்.

தங்கைக்கு ஒரே மகன். வழக்கமாக அவன் தான் ஓடிவந்து இவரைக் கூட்டிக்கொண்டு போவான். பின் செம்பில் நீர் வார்த்துக் கொண்டு வந்து கை அலம்புவதற்காக ஊற்றுவான்.

அன்றும் . அப்படித்தான் அக்கறையோடு செம்பில் நீர் வார்த்துக் கொண்டு ஓடி வந்தான். குனிந்து அதை ஊற்றிக் கொண்டு இருந்தான்.

பெரியார் கையை கழுவிக் கொண்டேயிருந்தார்.

அந்த சமயத்தில் அந்த பையனின் தலையில் பொட்டென்று ஒரு குட்டு விழுந்தது. யாரென்று பார்த்தான். பெரியாரே தனது மற்றைய கையால் அப்படிக் குட்டியிருக்கிறார். அவனுக்கு ஒன்றும் விளங்கவில்லை.

பெரியார் அந்தப் பையனைப் பார்த்து ,“ ஏன் குட்டினேன் தெரியுமா? தண்ணீராக இருந்தாலும் அளவோடு செலவு செய்ய வேண்டும். தண்ணீர் தானே என்று தாராளமாக ஊற்றக் கூடாது. நெய்யாக இருந்தால் இப்படி ஊற்றுவாயா? எதையுமே வீணாக்கக் கூடாது” என்றாராம்.

இது இந்தக் காலத்திற்கும் ஏற்ற அறிவுரை!

பெரியவர்களெல்லாம் நம்மிடம் சின்னச் சின்ன விஷயத்துக்கெல்லாம் சிக்கனமாக இருக்கும் படி அறிவுரை கூறுவார்கள். அப்பொழுதெல்லாம் அது நமக்கு வேடிக்கையாக இருக்கும் அவற்றின் மதிப்பு நமக்குப் பின்னாடி தான் புரியும்.

இதை விட இன்னொரு வேடிக்கையான சம்பவமும் உண்டு.

பெரியார் ஒரு சமய்ம் தனது உதவியாளரைக் கூப்பிட்டு யாரோ ஒருவருக்கு தந்தி கொடுக்கச் சொன்னாராம்.

தந்தியில் கொடுக்க வேண்டியவிடயம் என்ன வென்று கேட்டிருக்கிறார் உதவியாளர்.

“ஏற்கனவே சொல்லியாச்சு?–என்ற விஷயத்தைத் தான் தந்தியில் கொடுக்க வேண்டும் . அதிகமாக வார்த்தைகளை செலவு பண்ணாமல் சுருக்கமாக கொடு– என்று சொல்லி அதற்கான காசையும் கொடுத்தனுப்பினாராம்.

அந்த உதவியாளர் உடனே போய் தந்தியை கொடுத்து விட்டு வந்தார். தந்தியை எப்படிக் கொடுத்தாய் என்று கேட்டராம் பெரியார்.

‘Already Told’ என்று இரண்டே வார்த்தையில் கொடுத்து விட்டேன் என்றார் அவர் பெருமையாக!

“இன்னும் கூட சுருக்கியிருக்கலாமே... ஒரே வார்த்தையில் அதை சொல்ல முடியாதா?’’ என்றாராம் பெரியார்.

“அது எப்படி முடியும் ?”என்றிருக்கிறார் அவர்.

“ஏன்? Tolded–என்று கொடுக்க வேண்டியது தானே!” என்றாராம்.

“அப்படி ஒரு வார்த்தை ஆங்கிலத்தில் இல்லையே! ” என்றாராம் அவர்.

“இல்லை என்றால் என்ன ...விஷயம் புரியுதா இல்லையா , தந்தியை வாங்குபவர் அதைப் புரிந்து கொள்ளமாட்டாரா?”என்றாராம் பெரியார்.

ஒரு தடவை பெரியார் மேடையில் உட்கார்ந்திருந்தார். அவருக்கு எதிர் வரிசையில் ஒருவர் காலுக்கு மேல் கால் போட்டு உட்காந்திருந்திருந்தார். இதைப் பார்த்த ஒருவர் பெரியாரிடம் “பாருங்கய்யா...அவனை...! கொஞ்சம் கூட மரியாதை இல்லாமல் காலுக்கு மேல் கால்போட்டு உட்காந்திருக்கிறான்” என்றாராம்.

பெரியார் மெதுவாக அவர் பக்கம் திரும்பி“அவன் காலை அவனுடைய காலுக்கு மேல் போட்டு உட்காந்திருக்கிறான். இதில் நமக்கு எங்கே மரியாதை குறையப் போகிறது!”என்றாராம். *தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# பொருளாதாரக் கொள்கை தோல்வியினால் செயலிழந்து நிற்கின்றது ஐ.தே.கட்சி

## அமைச்சர் திஸ்ஸ விதாரண

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியின் பொருளாதாரக் கொள்கை தோல்வி



யடைந்துள்ளதால் ஐ.தே. கவினரும் , ரணிலும் மக்கள் முன் செயலிழந்து நிற்கின்றனர் என்று விஞ்ஞான தொழில் நுட்ப அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸவிதாரண தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நடைபெற்ற வரவுசெலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான 6ஆம் நாள் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர் திஸ்ஸ விதாரண மேலும்கூறியதாவது ஐக்கிய தேசிக் கட்சியின்பொருளாதார கொள்கை தோல்வியடைந்து விட்டது. அவர்களின் திறந்த பொருளாதார சிந்தனை மண்ணைக்கௌவியுள்ளது. தற்போது ஐ.தே.க. வினரும் ரணிலும் மக்கள் முன் செய லிழந்து நிற்கின்றனர்.

சம்பள உயர்வு வாழ்க்கைச் செலவு குறைப்பு என்று முதலைக் கண்ணீர் வடிக்கும் ஐ.தே.க இப்போது அவற்றுக்காக போராட்டத்தில் ஈடுபடப் போவதாகக் கூறுகின்றது. அவர்களது ஆட்சி நடை பெற்ற 2002-2003 காலப் பகுதியில் சம்பள உயர்வு வழங்கப்பட்டதா? ஆனாலும் இப்போது அரசஊழியர்களுக்கும் ஓய்வுதியம் பெறுபவர்களுக்கும் அனுகூலம் கிடைத்துள்ளது.

அரச ஊழியர்களின் சம்பளத்திற்குசமாந்திரமாக தனியார் துறையினருக்கு சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும் என லங்கா சமசமாஜக் கட்சியின் சார்பிலே கோரிக்கை விடுக்கின்றோம். இந்த வரவு செலவுத்திட்டம் சிறந்த முறையில் அமுல் படுத்தப் பட்டால் நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மை பயப்பதாக இருக்கும் . (ஓ-6)

# தமிழக மக்களின் உதவியுடன் ஈழம் மலரப் போவது உறுதி

## முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈழவேந்தன்

எல்லை மீறிய அரசியல் நெருக்கடிக்கிடையில் சிக்கி அல்லல்படும் ஈழத் தமிழ் இனத்தின் துயர் துடைக்கும் கருணை உள்ளம் படைத்த கருணாநிதிக்கு ஈழத் தமிழினம் நன்றி கூறக் கடமைப் பட்டுள்ளது என்று தமிழ் தேசியகூட்டமைப் பின் முன்னாள் பாராளு மன்ற உறுப்பினர் மா.க. ஈழவேந்தன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் வெளியிட்டுள்ளஅறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக தன் பதவியைத் துறப்பதற்கும் ஆயத்தம் என்று கூறியதுடன் தமிழனுக்கு தீங்கு வந்தால் அதை சகித்துக் கொண்டு பதவியில் நீடிக்கும்பதவி வெறி எந்தத் தலைவருக் கும் கிடையாது என்றும் முதல்வர் தெரிவித்திருந்தமைவரவேற்கத்தக்கது.

முன்பொரு தடவை நாம் முதல் வரை சந்தித்து ஈழத்தமிழர்களின் பிரச்சினைகள் குறித்து தெரிவித்த போது தமிழக மக்கள் கிளர்ந் தெழும் போது அவர் களை அடக்குவது கடினம் . அந்தக் காலம் விரைவில் வரும் என்றார் . அன்று தமிழக மக்க ளைப்பற்றி கலைஞர் வண்ணித்தமை மெய்ப் பிக்கப்பட்டுள்ளது.

தமிழக மக்கள் இன்று கிளர்ந்தெழுவதை எவரும் தடுக்க முடி யாத நிலை உருவாகியுள்ளது. இன்று தமிழகத் தலைவர்கள் தடம் புரண்ட போதி லும் தமிழக மக்கள் உணர்ச்சிப் பிழம்பாக உருவெடுத்துள்ளனர்.

எனவேஈழத் தமிழ் மக்களின் மீது கருணை கொண்டுள்ள கலைஞர் மற்றும் தமிழக மக்களின் உதவி யுடன் ஈழம் மலரப்போவது உறுதி. கலைஞர் எம்மைக் காப்பா ற்று வதும் உறுதி. வரலாறு தருகின்ற இவ் வாய்ப்பினை அவர் பயன்படுத்துவார் என்பது அசைக்க முடியாத நம்பிக்கை. (ஓ-6)

# இராசி பலன்

19.11.2008
(கார்த்திகை 4, புதன்கிழமை)
ஸப்தமி முன்னிரவு 9.38மணிவரை
ஆயிலியம் பின்னிரவு 2.03மணிவரை
இராகுகாலம் 12.09-1.39மணிவரை
சுபநேரம்4.39-6.09மணிவரை

| | |
|---|---|
| மேடம் | பயந்த சுபாவம், தாய்வழி உறவு, ரோக நிலை, அதிக பிரயாசை. |
| இடபம் | இஷ்ட சித்தி, சுப நிகழ்வு, அன்னியர் சந்திப்பு, மனோ தைரியம். |
| மிதுனம் | மனோ சங்கடம், தொழில் ஆர்வம், கௌரவக்குறைவு, பொருள் விரயம். |
| கடகம் | தெய்வ சிந்தை, வெகுமானம், நல்ல முயற்சி, போசனசுகம். |
| சிங்கம் | சோம்பல் நிலை, முயற்சி தாமதம், கோபப்படுதல் , பிரயாணம். |
| கன்னி | தெய்வ தரிசனம், சகோதரர் உதவி, கீர்த்தி, காரிய நன்மை. |
| துலாம் | நண்பர்கள்உதவி, தொழில் முன்னேற்றம், பெருமையடைதல், தெய்வதரிசனம். |
| விருச்சிகம் | ஆன்றோர் மதிப்பு, உடல் உழைப்பு, உஷ்ண வியாதி, பிரயாணம். |
| தனுசு | கௌரவக் குறைவு, வேலைச் சுமை, அஜீரணக்கோளாறு, முயற்சி தாமதம். |
| மகரம் | தெய்வ தரிசனம், கலந்து ரையாடல், காரிய அனுகூலம், கீர்த்தி. |
| கும்பம் | சுக வாழ்வு, எடுத்தகருமங்கள்கை கூடும், தெய்வ சிந்தை, புதிய திருப்பம். |
| மீனம் | பணக்குறைவு, அஜீரண ரோகம், வியாபார நன்மை, சொத்துப் பிணக்கு. |

வளவன்

# படையினரின் தாக்குதலால் 14ஆயிரம் மாணவர்கள் கல்வி இழந்துள்ளனர்

## வலயக் கல்விப் பணிமனைகள் தகவல்

இலங்கை படையினரின் தாக்குதல்கள் காரணமாக வன்னிப் பெரு நிலப்பரப்பில் 14 ஆயிரம் மாணவர்கள் இது வரை பாடசாலைகள் எதிலும் இணைந்து கொள்ளவில்லை என்று வலயக் கல்விப் பணி மனை தகவல்கள் தெரிவிக்கின்றன.

துணுக்காய் கல்வி வலயத்தில் 2 ஆயிரத்து 500க்கும் அதிகமான மாணவர்களும் கிளிநொச்சி கல்வி வலயத்தில் 10ஆயிரம் வரையான மாணவர்களும், மடு கல்வி வலயத்தில் ஆயிரத்து 500வரையான மாணவர்களும், இது வரை எந்த பாடசாலைகளிலும் இணைந்து கொள்ளவில்லை.

பாடசாலைகள் ரீதியாக வலயக் கல்வி திணைக்களங்கள் மேற்கொண்ட புள்ளி விபரங்கள் மூலம் தெரியவந்துள்ளதாக கிளிநொச்சி , மடு ,துணுக்காய் ,வலயக் கல்வித் திணைக்களங்கள் தெரிவித்துள்ளன. (ஓ-6)

# வெற்றி எப்.எம். பணிப்பாளரை விடுதலை செய்ய வேண்டும்

## எல்லைகளற்ற ஊடகவியலாளர் சங்கம் கோரிக்கை

பாரிஸில் அமைந்துள்ள எல்லைகளற்ற ஊடகவியலாளர் சம்மேளனம் இலங்கையில் கடந்த சனிக்கிழமை பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யபட்ட வெற்றி எப்.எம் வானொலியின் நிகழ்ச்சி பணிப்பாளர் ஏ.ஆர் .வி.லோசனை விடுதலை செய்ய வேண்டும் என இலங்கை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

லோசன் மீதுசுமத்தப்பட்ட பயங்கரவாதத்திற்கு உதவினார் என்ற குற்றச்சாட்டு சாட்சியங்களின் அடிப்படையில் அமைய வேண்டும் என்பதேயன்றி சாதாரண தகவல்களின் அடிப்படையில் அமைந்திருக்க கூடாது என தெரிவித்துள்ளது.

இலங்கையில் உள்ளஅதிகாரிகளை பொறுத்த வரையில் தமிழ் ஊடகவியலாளர்களை தமிழீழ விடுதலைப் புலிகளின் முகவர் களாக கருதி கைது செய்யும நடவடிக்கைகள் இடம் பெற்று வரு வதாக எல்லை களற்ற ஊடகவியலாளர் சம்மேளனம் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் வெற்றி எப்.எம். வானொலியின் மற்றும் ஒரு ஊடக வியலாளரும் பொலிஸாரால் விசாரணை செய்யப் பட்டு ள்ள தாக எல்லை களற்ற ஊடகவியலாளர் சம்மேளனம் குறிப்பிட்டுள்ளது. (ஓ-6)

# நெல்லியடி ம. ம. வித்தியாலய அணி உடுப்பிட்டி அ.மி அணியை தோற்கடித்தது

(யாழ்ப்பாணம்)

13 வயதுப் பிரிவினருக்கான துடுப் பாட்டப் போட்டியில்நெல்லியடி ம.ம வித்தி யாலயஅணியும் உடுப்பிட்டிஅ.மி கல்லூரி அணியும் மோதியது. நெல்லியடி ம.ம.வி மைதானத்தில் நடை பெற்ற இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய நெல்லியடி ம.ம.வி அணி வி.அனுசாந் 29 ஓட்டங்க ளையும், ச. சஜந்தன் 23 ஓட்டங்களையும், ம.மலரவன்26 ஓட்டங்களையும், இந்து ஜன்17 ஓட்டங்களையும் பெற முதல் இனிங் ஸ்சிற்காக 160 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பந்து வீச்சில் உடுப்பிட்டி அ.மி. கல்லூரி அணி சார்பாக சி. நிலக்சன் 4 விக் கெற்றுக்களையும் வி.சஞ்சீவன்3 விக்கெற் றுக்களையும் கைப்பற்றினர்.

தமது முதல்இனிங்ஸ்சிற்காகத் துடுப்பெடுத்தாடியஉடுப்பிட்டி அ.மி.த கல் லூரி அணியானது நிரோஜன் 34, சஞ்சீ வன்32ஓட்டங்களையும் பெற்ற நிலையில் 116 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெற்றுக் களையும் இழந்தது.

பந்து வீச்சில் நெல்லியடி ம.ம.வி சார்பில் தனுஜன் 4விக்கெற்றுக்களையும், ச.சஜந்தன் 3விக்கெற்றுக்களையும் கைப் பற்றினர்.

இரண்டாவது இனிங்ஸிற்காக துடுப் பெடு த்தாடிய நெல்லியடி ம.ம.வி அணி இந் துஜன்17ஓட்டங்களையும், கோகுலராஜ் 11ஓட் டங்களையும், பெற்றுஅணி53 ஓட்டங் களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தினை இடை நிறுத்தி உடுப்பிட்டி அ.மிகல்லூரி அணி யினை இரண்டாவது இனிங்ஸ்சிற்காக துடுப் பெடுத்தாட பணித்தனர். துடுப்பெடுத்தாடிய உடுப்பிட்டி அ.மி கல்லூரி அணியின் பிரசா ந்தன் 15 ஓட்டங்களையும், பிரணவன் 22 ஓட்டங்களையும், நிரோஜன் 22 ஓட் களை யும் பெற்றுக் கொண்டனர்.3 விக்கெட் இழப் பிற்கு 82 ஓட்டங்களைப் பெற்ற நிலை யில் ஆட்டம் முடிவுற்றது.(ஓ)

# பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவின் 83ஆவது அவதார தின விழா

பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபா வின் 83ஆவது அவதார தின விழா 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 5 மணி தொடக்கம் 12மணிவரையும் ,மாலை 2மணி தொடக்கம் 4.45 மணிவரையும் யாழ் திரு நெல்வேலி சேர்பொன் இராமநாதன் வீதியி லுள்ள பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலை யத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் அதிகாலை 5 மணிக்கு ஓம் காரம்சுப்ரபாதம் நகர சங்கீர்த்தனத்துடன் ஆரம்பமாகி 8.15 மணிக்கு பிரசாந்திக் கொடி யேற்றம், வேதபாரயணம், ஆஷ்டோத்திரம் தொடர்ந்து நாமபஜனை திருமதி. ஆர் வாஸஸ்பதி,கோ.சத்தியன்,சதாவேல் மாறன் , அ. ஜெயராமன் ,தி. வரோதயன் ஆகி யோரின் இசை அமுதமும் "நல்ல தொரு குடும்பம் " என்னும் தலைப்பில் நாடகமும் 11.30மணிக்கு சுன்னாகம் ஹற்றன் நஷனல் வங்கி முகாமையாளர் ஆர் .சுந்தரேஸ் வர னின் சிறப்புச் சொற்பொழிவும் தொடர்ந்து பஜனையும் இடம் பெறும். மாலை 2மணிக்கு "ஸாயி அவதாரம் "எனும் தலைப்பில் வில் லிசையும் "கர்ணன் "எனும் தலைப்பில் நாட கமும் தொடர்ந்து 3.45 மணிக்கு பஜனை, திரு வூஞ்சல் ,மகாமங்கள ஆராத்தி ஆகியன இடம் பெறவுள்ளது. (ஓ-4)

# தேசிய மட்ட சிறுகதைப் போட்டியில் முதலிடம் பெறும் உடுப்பிட்டி ம.க.மாணவி

இலங்கையின் கல்வி அமைச்சு சிறுவர் தினத்தையொட்டி ***உலகை வெற்றி கொள்ளும் சிறுவர்கள்*** எனும் தொனிப் பொருளில் ஹற்றன்நஷனல் வங்கியின் அனுசரணையுடன் நடாத்திய சிறுகதைப் போட்டியில் தரம் 10 இல் கல்வி கற்கும் மாணவியான செல்வி உஷானி ஜெயானந்தகுமார் தேசிய மட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டார்.

சிறுவர் தினமாகிய ஒக்டோபர் 01ஆம்திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடை பெற்ற விருது வழங்கும் வைபவத்தில் மேற்படி மாணவி பங்கு பற்றி கல்வி அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த மற்றும் ஹற்றன் நஷனல் வங்கிப் பணிப்பாளர் ஆர். தியாகராசா ஆகியோரி டமிருந்து விருதினைப் பெற்றுக்கொள்ள வதைப் படத்தில் காணலாம். (ஓ)





## யாழ் செய்திகள்

# சான்றிதழ் கிடைக்கபெறாதோர் தொடர்பு கொள்க

வண்ணை - சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவசமய அபி விருத்திக் கழகத்தால் கடந்த மாசி மாதம் நடா த்திய சைவசமய அறிவுப் பரீட்சை ,செயல் முறைப் போட்டி ஆகியவற்றின் சான்றி தழ்கள் யாவும் பரீட்சாத்திகள் கல்வி பயிலும் பாடசாலைகளுக்கும் தனிப்பட்ட பரீட்சார்த்தி களுக்கு தபால்மூலம் அனுப்பிவைக்கப்பட்டு ள்ளது.

சான்றிதழ் கிடைக்கப் பெறாதோர் பரீட்சைப் பெறுபேற்றுஅட்டையுடன் தொடர்பு கொள் ளுமாறு கழகத்தின் பரீட்சை செயலர் சு.சிறீ காந்தன்அறிவித்துள்ளார். (ஓ)

# ஆன்மீக நிகழ்வு

(மருதங்கேணி)

தொண்டமானாறு செல்வ சந்நிதி ஆலய சூழலில் அமைதிருக்கும் சந் நிதியான் ஆச் சிரமத்தில் பிரதி வெள்ளிக்கி ழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வு தொடரில் நாளை மறு நாள் வெள் ளிக்கிழமை மு.ப10.30 மணியளவில் பெரிய புராணம் தொடர் சொற் பொழிவை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமாரவேல் வழங்கவுள்ளார். (ஓ-35)

புலோலி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆல ய சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ் வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக் கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன் மீக நிகழ்வுத் தொடரில் எதிர் வரும் 23ஆம் திக தி ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணி பூசை முடிவுற்றதும் இறை பக்தியும் மனித வாழ்வியலும் எனும் பொருளில் த.சக்தி வேல் சொற் பொழிவாற்றுவார். (ஓ-35)

# ஆறுமுக நாவலர் குரு பூசை

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறைமன்றம், வருடந்தோறும் யாழ்ப்பாணம் நாவலர் வீதி நாவலர் கலாசார மண்டபத்தில் நடாத்தி வரும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் குரு பூசை நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு நடை பெறவுள்ளது. (ஓ)

# அங்கத்தவர் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி கைத் தொழி ல் வணிகர் மன்றத்தில் அங்கத்துவம் பெற்று 25 வருடங்களைப் பூர்த்தி செய்த அங்கத் தர்வர்க ளை கௌரவிக்கவுள்ளதாகவும், அது தொடர்பான திகதி இது வரை தீர்மா னிக்கப்படவில்லையென்றும் வணிகர் மன்றத் தலைவர் அறிவித்துள்ளார். (ஓ)

# புங்குடுதீவு விவசாயப் போதனாசிரியர் பிரிவில் சிறந்த விவசாயிகள் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் விவசாய திணைக்களத்தின் ஏற்பாட்டில் புங்குடுதீவு விவசாயப் போதனா சிரியர் பிரிவில் சிறந்த விவசாயிகளை கௌரவிக்கும் வைபவம் இன்று புதன்கிழ மை காலை 10.30 மணிக்கு புங்குடுதீவு பெருங் காடு கந்தசாமி கோவில்மண்டபத்தில் புங்குடு தீவு போதனாசிரியர் பொ.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழவில் பிரதம விருந்தின ராக வேலனை பிரதேச செயலாளர் மு.நந்த கோபாலன் சிறப்பு விருந்தினர்களாக நெடுந் தீவு உதவி அரசாங்க அதிபர் என். திருலி ங்க நாதன் யாழ். பிரதி விவசாயப் பணிப் பாளர் ( விரி) சி.சிவகுமார். ஊர்காவற்றுறை இலங் கை வங்கி முகாமையாளர்கு. சிவஞான சுந் தரம் ஆகியோர் கலந்து கொள்ள வுள்ளனர்.

இவ் விழாவில் விவசாயிகளுக்குத் தேவையான தொழில் நுட்பத்தகவல்கள் காட் சிப்படுத்தப்படவுள்ளதுடன் அது தொடர்பான துண்டுப்பிரசுரங்களும் றுவான் இன சோள விதையும், திஸ்ஸ இன நிலக்கடலை விதை யும் , ரவி இனகுரக்கன் விதையும் விற் பனை செய்யப்படவுள்ளது.

ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்று கௌரவிக்கப்படவுள்ள விவசாயிகளின் பெயர்விபரம் வருமாறு.

**சிறந்த நெல் உற்பத்தியாளர்.**

கோ.வாமதேவன்(நயினாதீவு),கை. ஸ்ரீகாந் தன்(புங்குடுதீவு),த. நவரெத்தினம் (நெடுந்தீவு)

**சிறந்த சேதனப்பண்ணையாளர்.**

மு. இலங்கநாதன்(நெடுந்தீவு),அ. முத்து லிங்கம்(நயினாதீவு), வை.சகா தேவன்( நெடு ந்தீவு).

**சிறந்த சுய விதை நெல் உற்பத்தியாளர்.**

ந.புவனேந்திரகுமார்(நெடுந்தீவு), பொ.இராசரெத்தினம்(நயினாதீவு), தா.றெக் சியன் (புங்குடுதீவு)

**சிறந்த ஒருங்கிணைந்த பண்ணையாளர்.**

நா.முத்துக்குமாரி(புங்குடுதீவு),இ.உதய நேசன்(நயினாதீவு),வை.கல்விராசா( புங் குடுதீவு)

**சிறந்த பெண்தலைமைத்துவ விவசாயி**

திருமதி.மு.ஞானேஸ்வரி (நயி னாதீவு), திருமதி. யோ.தனேஸ்வரி (புங் குடுதீவு), திருமதி.ப.பத்மசோதி (நெடுந்தீவு)

**சிறந்த சோளச் செய்கையாளர்**

ச.துரைராசா( நெடுந்தீவு),அ. கந்தையா (நயினாதீவு),க.நாகசிவனேஸ்வரி (நயினா தீவு)

**சிறந்த நிலக்கடலைச் செய்கையாளர்**

சி. ஞானேஸ்வரி(நயினாதீவு),க.நாகம்மா (புங்குடு தீவு),கு.பாக்கியவதி (புங்குடுதீவு)

**சிறந்த குரக்கன் செய்கையாளர்**

க.சேனாதிராசா( நெடுந்தீவு) ,நா.பகீரதன் (நெடுந்தீவு),மா. இராயப்பு( புங்குடுதீவு). (ஓ-4)

# 83 ஆவது அவதார தினவிழா

(மருதங்கேணி)

பருத்தித்துறை சாயிமந்திர் பக வான் ஸ்ரீ சத்திய சாய் பாபாவின் 83 ஆவது அவதார தினத்தை 23ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை கு.இ.இராசநாதன் தலைமை யில் கொண்டாடப் படவுள்ளது.

இந் நிகழ்வுகள் அதிகாலை 5 மணி முதல் இடம் பெறும் . இதில் "கலியுக அவதா ரம் சாயி"எனும் தலைப்பில் யாழ் போதனா சாலை வைத்தியரும், வட இலங்கை ஸ்ரீ சத்திய சாயி இளைஞர் மன்ற இணைப் பாளருமான வைத்திய கலாநிதி இ.சிவ சங்கர், " கண்ணுக்கு இமை போன்றவர்" எனும் பொருளில் யாழ் தும்பளை சிவப் பிர காச வித்தியாசாலைஆசிரியர் கே. கே. யோக நாதன்ஆகியோர் உரையாற்றவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து பாபா புகழ் பாடுவோம் எனும் நூல் வெளியீடும் சாயி யின் கானங்கள், கவிதையில் சாயி, கரகாட்டம், நாடகம் ஆகிய கலை நிகழ்ச் சிகளும் தொடந்து திருவூஞ்சல், மங்கள ஆரத்தி ஆகியன இடம் பெற்று பிரசாதம் வழங்கப்படும் இறுதியாக வீடியோபடக் காட்சியும் இடம் பெறும். (ஓ-35)

# ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

(மருதங்கேணி)

வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரிவுக்கான ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் நாளை வியாழக்கிழமை பகல் 10 மணிக்கு பிரதேச செயலர் இ. வரதீஸ்வரன் தலை மையில் நடை பெறவுள்ளது.

சகல திணைக்கள உத்தியோகத் தர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பருத்தி த்துறை பிரதேச செயலர் அறிவித் துள் ளார். (ஓ-35)

# நோத் முதல் கோபல்லவா வரை 157



**சேர்.பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் (16.4.1851 -26.11.1930)**

படித்த இல்ங்கையர் பிரதிநிதியாக இராமநாதன் இருந்த காலத்திற் செய்த சேவையை இன்றும்தான் சிங்கள மக்கள் வெகுவாகப் பாராட்டுகிறார்கள்.

சட்ட சபையின் 1914 ஆம் ஆண்டின் வைகலின் போது பலமுறிகள் விவாதிக் கப்பட்டன. அப்போது உத்தியோகப் பற்றற்ற அங்கத் தவர்கள் எல்லோரும் வெளியே சென்று விட்டார்கள்.

ஆனால் இராமநாதன் மாத் திரம் தமது ஆசனத்தில் அசையாமல் இருந்தார். அவருடைய நண்பர்கள் அவரிடம் ஏன் நீங்களும் வெளியேறாமல் இங்கே இருக்கிறீர்கள் என்று கேட்டார்கள். அதற்கு இராமநாதன், ''நான் இங்கே இருப்பது இங்கே எடுக்கப்படும் ஒவ்வொரு முறியையும் எதிர்த்து வாக்களிப்பதற் காகவே நானும் வெளியேறினால் முறிகள் எதிர்ப்பின்றி ஏகமனதாக நிறை வேற்றப்பட்டவை என்றல்லவா பதியப் படும்.'' என்றார்.

இராமநாதன் ஆங்கிலேயரின் போக் கையும்,அவர் தம் அரசாங்கத்தின் அமைப் பையும், எவருக்கும் அஞ்சாது வன்மை யாகக் கண்டிப்பது வழக்கம். அதனால் அவரோடு வாதப்பிரதி வாதங்களில் கலந்து கொள்வதை ஆள்பதிகளும் காரியதரிசி களும் இன்பகரமானதாகக் கருதினார். புலமை மிக்க ஆள்பதி கிளிபேட்டும் அவரு க்கு முன்னிருந்த ஹமில்ரன் கோடனும் இராமநாதனுடன் வாதம் புரிந்த வண்ணம் இலக்கியப் போக்காக உள்ளன. அவ் வண்ணமே கிறிஞ்ரி என்னும் ஐரோப்பிய அங்கத்தவருடன் இராமநாதன் சொற்போர்

**மீள் பார்வை**

புரிந்தனர்.

இராமநாதன் ஐம்பது ஆண்டுகளாகச் சட்டசபையில் உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவராயும், உத்தியோக அங்கத் தவராயும், நியமன அங்கத்தவராயும் தெரியப் பெற்ற அங்கத்தவராயும், இருந்தார். அத் தகைய தகுதியும் மேன்மையும் இலங்கையில் வேறெவருக்கும் எக்காலத்திலும் இருந்த தில்லை இது உண்மை. வெறும் புகழ் உரையல்ல.

இராமநாதன் இலங்கையில் 1820 ஆம் ஆண்டுக்கு முன் பின்னாக ஏற்பட்ட பழைய வழக்குகளையும், அவற்றின் விசார ணைகளையும், தீர்ப்புகளையும் கருத் தூன்றிப் படித்துப் பெரும் புலமையும் ஆற்றலும் பெற்றுக் கொண்டார்.

இலங்கையில் சட்ட அறிக்கைகள் எழுதப்படும் வழக்கமும் அவராலேயே ஆரம்பிக்கப்பட் டதால் அவரை இலங்கைச் சட்ட அறிக் கையின் தந்தை என்று செல்லமாக அழைப்பார்கள்.

இராமநாதனுடைய சட்ட அறிக்கையும் இலங்கையில் எழுந்த வழக்குகளின் விபரத்தையும், கண்ட உயர் நீதியரசரான ஆங்கிலேயர் இராமநாதனின் நுண்ண றிவை வெகுவாக மெச்சினர்.

அவருடைய தியாக சிந்தையும், பரோபகாரச் செயலும், உறுதியான உழைப்பு ம் அமைந்தவாற்றை வெகுவாக வியந்தார். இப்பயிற்சி விசேடத் தாலேயே இராமநாதனுக்குச் சட்ட அறிஞர் உத்தி யோகமும், சட்டத்துறை நாயக உத்தி யோகமும் இலகுவாக இருந்தன போலும்,

ஒருவருக்கு அறிவு, ஆற்றல், செல்வம், செல்வாக்கு, ஈகை, பெருந்தன்மை ஆகிய பண்புகள் ஒருங்கேயமைவது அருமை என்பர். இவையாவும் இராமநாதனிடத்தில் ஒருங்கமைந்திருந்தன.


தங்கவிக்கிரகம் போன்ற உருவம், தலையிலே தலைப் பாகை, நெற்றியிலே சந்தனப்பொட்டு, தாமரை இதழ் போன்ற வாயிற் புன்சிரிப்பு, நெஞ்சை அலங்கரிக்கும் நீண்ட உத்தரியம் இராமநாதனின் அழகை அதிகப்படுத்தின. அவருடைய அறிவுந் திருவும் உருவும் எவரையும் பணிய வைத்தன.

இளமைக் காலந் தொடக்கம் இராமநாத னுக்குக் கீழைத்தேயக் கலாசாரத்திலும், சைவசித்தாந்த நெறியிலும் பேரபிமானம் இருந்தது. அவர் சைவசித்தாந்த அறிவை விருத்தி செய்து கொள்வதற்காக வட மொழியை நன்கு கற்று, அருள் பரானந்த யோகி என்னும் பெரியாரிடம் தம் அறிவை வளப்படுத்திக் கொண்டார். அவர் திரு வாசகத்தை அடிக்கடி மாணவருக்குக் கூறுவது வழக்கம்.

இராமநாதனுடைய ஞானவாழ்வின் அருமையை அறிந்த மைறன் பெல்ப்ஸ் என்னும் அமெரிக்கப் பெரியார், அவரை அமெரிக்காவுக்கு அழைத்து அங்கே சைவ சமயத்தின் மேன்மையைப் பற்றிப் பேசு வித்தார்.

புலவர் போற்றும் புரவலராய் வாழ் ந்த ராமநாதனை புலவர் திலகமென வாழ் ந்த சோழவந்தான் அரசஞ் சண்முகனார் என்னும் பெரியார் பாடிப் புகழ்ந்துள்ளார். இலக்கிய நயஞ்செறிந்த அப்பாடல்களில் இரண்டை இங்குக் குறிப்பிடல் பொருத் தமாகும்.

(தொடரும்...)





புலோலி காந்தியூர் முன்பள்ளி திறப்பு விழாவை புலோலி வடமேற்கு கிராம சேவையாளர் செ. அ. ஞான சந்திரன் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும் அருகில் சங்கத்தின் முன்னாள் தலைவர் ச. சிறீஸ்கந்தராசா மற்றும் கரவெட்டி பிரதேச செயலர் சமூர்த்தி உத்தியோகத்தர் க. குகதாசன் ஆகியோர் நிற்பதை முதலாவது படத்திலும் சிறார்களின் கலைநிகழ்ச்சி இடம் பெறுவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.



51-வது தேசியமட்ட ஹொக்கி சுற்றுப்போட்டியில் கலந்து கொண்ட யாழ் மாவட்ட ஹொக்கி அணியினைப் படத்தில் காணலாம். படம் :கிருஷ்ணா





இமையாணன் அ.த.க. பாடசாலை நுழைவாயிலை அதிபர் திருமதி ச. நவமணி திறந்து வைப்பதை முதலாவது படத்திலும், இல்ல மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந் தினராக கலந்து சிறப்பித்த வடமராட்சி பிரதிக் கல்விப்பணிப்பாளர் செ. உதயகுமார், பாடசாலை அதிபர் மற்றும் பரிசில் பெற்ற மாணவிகள் ஜெ. நிலாஜினி, சி. அபர்ணா, ச. சஞ்சிகா ஆகியோருடன் நிற்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

## சமூகவியல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக சமூகவியல் சமூகத்தின் கருத்தரங்குத் தொடரில் இன்று புதன்கிழமை பிற்பகல் ஒருமணிக்கு பல்கலைக்கழக கலைப்பீடக் கட்டடத் தொகுதியில் நடைபெறவுள்ள கருத்தரங்கில் அரசறிவியல் துறை சிரேஷ்ட விரிவு ரையாளர் கே. ரி. கணேசலிங்கம் ''உலகளாவிய நிதி நெருக்கடியும் பன்னாட்டு அரசியலில் அதன் பாதிப்பும்'' எனும் தலைப்பில் உரையாற்றவுள்ளார். ஓ

## உயர் பட்டப்படிப்புகள் பீட பரீட்சைகள்/மீள் பரீட்சைகள்

வவுனியா வளாகத்தில் நடாத்தப்பட்டு வரும் கல்வியாண்டு 2005 / 07க்குரிய பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கை நெறியின் இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டுக்கான பரீட்சை/ மீள் பரீட்சை டிசம்பர் மாதம் 6ஆம் திகதி அன்று வியாபாரக் கற்கைகள் பீடம் வவுனியா வளாகத்திலும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலும் நடைபெறும்.

முதுக்லைமாணிக் கற்கைநெறிகளான அபிவிருத்திக் கற்கைநெறி, குடித்தொகை அபிவிருத்திக் கற்கைநெறி, பிரதேச திட்டமிடல் கற்கைநெறி மற்றும் கல்வியியல் முதுமாணி ஆகிய கற்கைநெறிகளுக்கான முதலாம் பருவ பரீட்சைகள் / மீள்பரீட் சைகள் டிசம்பர்மாத முதல்வாரத்தில் நடைபெற ஒழுங்குகள் மேற் கொள்ளப் பட்டுள்ளன.

மேலும் கீழ்குறிப்பிடப்பட்டுள்ள கற்கை நெறிகளை மேற்கொண்டு பரீட்சையில் சித்தியடையத் தவறியவர்களிடமிருந்தும் மீள்பரீட்சை விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

- பொதுநிர்வாகத்தில் பட்டப்பின் டிப்ளோமா கற்கைநெறி
- நூலக தகவல் விஞ்ஞானத்தில் பட்டப்பின் டிப்ளோமா கற்கைநெறி

மேற்படி பரீட்சைகளுக்கு இதுவரை விண்ணப்பிக்கத் தவறியவர்கள் தம் பரீட்சை தொடர்பான விண்ணப்பங்களை உடனடி யாக பட்டப்பின் படிப்புகள் பீடத்தில் சமர்ப் பிக்கும்படி யாழ் பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீடாதிபதி ச. சத்தியசீலன் கேட்டுக் கொள்கின்றார். ஓ







அகில இலங்கைப்பாடசாலைகள் கூடைப்பந்தாட்ட சங்கத்தால் யாழ் மாவட்ட பாடசாலைகள் கூடைப்பந்தாட்ட சங்கத்தின் அனுசரணையோடு அண்மையில் உடுவில் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற 17 வயதுப்பிரிவினருக்கான கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதி நிகழ்வில் விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர் ப. தர்மகுமாரன் உரையாற்றுவதையும் வீராங்கனை ஒருவருக்கு நிகழ்வின் பிரதமவிருந்தினர் விருது வழங்கி கௌரவிப்பதையும் இரண்டாம் இடம்பெற்ற உடுவில் மகளிர் கல்லூரி அணியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள் :- கோபி)

# வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு
# ஆய்வு அபிவிருத்திப் பிரிவு

## க.பொ.த. சாதாரண பரீட்சை 2008 - பயிற்சி வினாத்தாள்- விஞ்ஞானம் - I

பகுதி – 1 01 மணி

எல்லா வினாக்களுக்கும் விடை தருக
மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

1) கலத்தைக் கண்டறிந்த விஞ்ஞானி யார்?
1).கிரகர் மெண்டல் 2). றொபேட்குக் 3). டாவின் 4). லான்ஸ்ரைனர்

2) தாவரக்கலத்திற்கு மட்டும் உரியது எது?
1). கரு 2). கலமென்சவ்வு 3). பச்சையவுருமணி 4). இழைமணி

3) மனிதனில் காணப்படும் நிறமூர்த்தச் சோடிகளின் எண்ணிக்கை
1). 23 2). 46 3). 30 4). 50

4) சூரியனிலிருந்து புவிக்குக் கிடைக்கும் புறஊதாக் கதிர்கள் மூலம் பெறும் பயன் யாது?
1) பொருட்களை உலர்த்துதல் 2) தோலில் விற்றமின் தொகுப்பு
3) உடற் குறைபாடுகளை அறிதல் 4) உலோகங்களை ஒட்டுதல்

5) செந்நிற ஒளியைப் பெற மின்குமிழுக்குள் நிரப்பப் பொருத்தமான வாயு
1) நியோன் 2) ஹீலியம் 3) செனன் 4) ஆகன்


6) பெண்களில் ஈஸ்ட்ரோஜன், புரொஜெஸ்திரோன் ஆகிய ஓமோன்கள் செறிவு கூடிய மட்டங்களில் உள்ளபோது
1)சூல் கொள்ளல் தடைப்படும்
2)ஒரே நேரத்தில் இரு சூல்கள் வெளியேற்றப்படும்.
3)மாதவிடாய் வட்டம் நடைபெறும்
4)கருச் சிதைவு ஏற்படும்

7) இரத்தினக் கற்களைப் பட்டை தீட்டும் போது பிரகாசமாக இருக்கக் காரணம்
1) கடினத் தன்மை 2) நிறச் சேர்வைகள் இருத்தல்
3) முறிவுச் சுட்டி அதிகம் 4) அருமையாக இருத்தல்

8) நவீன வடத் தொடர்பாடலில் செப்புக் கம்பியுடன் ஒளியியல் நார்கள் பயன்படுத்துவதன் காரணம்
A.ஒளியியல் நார்கள் இலேசானவை
B.சக்தி இழப்புக் குறைவு
C.பெருந்தொகையான தகவல்களை ஊடுகடத்தல்
D.புற மின் செல்வாக்குகளுக்கு உள்ளாவது குறைவு.
1) ABC 2) BCD 3) ACD 4) ABCD

9) ஒரு குறித்த திணிவுள்ள வாயுவின் அமுக்கம் 100cm Hg அதன் கனவளவு $800cm^3$. வெப்பநிலை மாறாதிருக்கும் பொழுது அதன் அமுக்கத்தை 200cmHg ஆக மாற்றினால் அதன் கனவளவு யாது?
1) $400cm^3$ 2) $1200cm^3$ 3) $1600\ cm^3$ 4) $4000\ cm^3$

10) ஓய்வில் இருந்த ஒரு கல் சீராகக் கீழ் நோக்கி விழச்செய்யப்பட்டது. அக்கல்லின் இயக்கத்தைக் காட்டுவதற்கு ஏற்ற மிகப்பொருத்தமான வேக நேர வரைபு பின் வருவனவற்றுள் எது?




11) வெப்பக் கொள்ளளவின் அலகு
1) J/kg °C 2) J/kg 3) J/°C 4) J/kg°C

12) மனித உடலின் வெப்பநிலையை °F இலும் °C இலும் முறையே குறிப்பது
1) 36°F, 98.4°C 2) 98.4°F, 36.9°C
3) 98.4°F, 36°C 4) 98.4°F, 36.5°C

13 இரும்பு பிரித்தெடுக்கும் போது ஊதுலையில் சேர்க்கப்படும் பதார்த்தமாக அமையாதது,
1. சுண்ணாம்புக்கல் 2. கற்கரி 3. ஏமரைற்று 4. போக்சைற்று

14) திரவம் ஒன்றின் தன்வெப்பக்கொள்ளளவு 3500J/kg °C ஆகும் அத்திரவத்தின் என்ன திணிவுக்கு 700J சக்தி வழங்கப்பட்டால் அதன் வெப்பநிலை 1 °C ஆல் உயர்த்தப்படலாம்.
1) 0.2 kg 2) 2.1kg 3) 0.7kg 4) 0.25 kg

15) 500g திணிவுடைய கல் ஒன்று மாலாவினால் 25m/s என்ற வேகத்தில் வீசப்படின் கல்லின் இயக்கசக்தி என்ன?
1) 62.5J 2) 12.5J 3) 156.25J 4) 12500J

16) பின்வருவனவற்றுள் திறன் அதிகரிக்கும் சந்தர்ப்பம் அல்லாதது?
1.நீர் இறைக்கும் கப்பிக்கு எண்ணெய் போடுதல்
2.இழை மின்குமிழிற்குப் பதிலாக புளோரொளிர்வு மின் குமிழைப் பயன்படுத்தல்
3.சைக்கிள் ரயரில் தவாளிப்புகள் அற்றுப் போதல்
4.சைக்கிள் சில்லுக்கு குண்டுப்போதிகை போடுதல்

17) 50kg திணிவுடைய நீர்நிரல் 100m உயரத்தில் சேகரிக்கப்பட்டுள்ளது. அதில் சேமிக்கப்பட்ட அழுத்த சக்கி
1. 50KJ 2. 5KJ 3. 5000KJ 4. 50,000KJ

18)கருப்பஞ்சாற்றிலிருந்து சீனி உற்பத்தி செய்யும் போது எஞ்சும் கரைசலை நொதிக்கவிட்டு பெறப்படும் சிறந்த சேதனப் பக்க விளை பொருள்
1. அசற்றோன் 2. எதனோல் 3. அசெற்றிக்கமிலம் 4. மெதனோல்

19)தாவர வேர்மயிர் மூலம் உறிஞ்சப்படும் கனியுப்புகளுடன் கூடிய நீர் தாவரத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் கடத்தப்படும் செயன்முறை எவ்வாறு அழைக்கப்படும்.
1. ஆவியுயிர்ப்பு 2. ஒளித்தொகுப்பு 3. வேரமுக்கம் 4. சாற்றேற்றம்

20) நாகதாளித் தாவரம் ஆவியுயிர்ப்பைக் குறைப்பதற்காகக் கொண்டுள்ள இசைவாக்கம் பற்றிய கூற்றுக்களில் சரியானது.
1.இலைகளும், கக்க அரும்புகளும் முட்களாக மாறியுள்ளன.
2.இலைகள் இழக்கப்பட்டு தண்டு ஒளித்தொகுப்புச் செய்கிறது.
3.சளியத்தன்மையுள்ள தண்டு இருத்தல்
4.மேற்கூறிய யாவும்

21) ஒளித்தொகுப்புக்கு அவசியமான புறக்காரணிகள் எவை?
1.சூரிய ஒளி, காபனீரொட்சைட், பச்சையம்
2.சூரியஒளி, காபனீரொட்சைட், நீர்
3.காபனீரொட்சைட், நீர், பச்சையம்
4.சூரியஒளி, ஒட்சிசன், நீர்

22) காபன் தூள் கலந்த இரும்புத்தூள் சேர்வையொன்றை வேறாக்கச் சிறந்த முறை எது?
1. கரைத்தல் 2. வடித்தல் 3. காந்தத்தால் கவரல் 4. புடைத்தல்

***23,24, ஆம் வினாக்களுக்கு தரப்பட்ட தரவுகளை வைத்து விடையளிக்குக.***
**“X” என்ற மூலகம் VIIம் கூட்டத்திலும் 3ம் ஆவர்த்தனத்திலும் அமைந்துள்ளது.**

23) “X” இன் அணு எண் யாது?
1. 9 2. 17 3. 25 4. 10

24) X உம் மூலகம் Na உம் சேர்ந்து உருவாக்கும் சேர்வையின் சூத்திரத்தை எழுதுக
1. $Na_2X$ 2. $(NaX)_2$ 3. NaX 4. NXa

25) 30g யூரியா $[CO(NH_2)_2]$ நீரில் கரைத்து $1dm^3$ கரைசல் தயாரிக கப்பட்டது. கரைசலின் செறிவு யாது?
1. 5 $moldm^{-3}$ 2. 0.5 $moldm^{-3}$ 3. 2 $moldm^{-3}$ 4. 1800$moldm^{-3}$

26) பின்வருவனவற்றுள் மூலகம் எது?
1. சுட்டசுண்ணாம்பு 2. களி 3. செம்பு 4. பித்தளை

27) சமதானிகள் எனப்படுபவை
1.ஒரே மூலகத்தின் வேறுபட்ட திணிவுடைய அணுக்களாகும்
2.வெவ்வேறு மூலகங்களின் வேறுபட்ட திணிவுடைய அணுக்களாகும்
3.வெவ்வேறு மூலகங்களின் ஒத்த திணிவுடைய அணுக்களாகும்
4.ஒரே மூலகத்தின், ஒத்த திணிவுடைய அணுக்களாகும்

28) தாவரங்களில் ஒட்டுக்கலவிழையம் காணப்படும் பகுதி
1.இருவித்திலைத் தாவர தண்டு
2.இருவித்திலைத் தாவர வேர்
3.ஒருவித்திலைத் தாவர தண்டு
4.ஒருவித்திலைத் தாவர வேர்

29) Hb என்பது ஈமோகுளோபினைக் குறிக்கும்
$Hb + O_2 \longrightarrow HbO_2$ என்னும் மாற்றம் எங்கு நிகழ்கிறது
1.இதயம் 2.இழையம் 3. ஈரல் 4. நுரையீரல்

30) நற்போசணையாக்கம் என்பது
1.பாரலோகங்கள் நீருடன் சேர்தல்
2.உயர்மட்ட புளோரைட் செறிவு
3.நீரில் கல்சியம், மக்னீசியம் இருகாபனேற்றுக்கள் இருத்தல்
4.நீர்நிலைகளை அல்காக்கள் மூடுவதால் உயிரினங்கள் இறந்து பற்றீரியாத் தொற்று ஏற்படுவதால் துர்மணம் உருவாதல்.

31) உயிர்ப்பான அகத்துறிஞ்சலுக்கு சிறப்பான உதாரணமாக அமைவது.
1.நுரையீரலிலுள்ள ஒட்சிசன் வாயு பரிமாற்றமடைதல்
2.வேர்மயிர்களூடாக கனிப்பொருட்கள் அகத்துறிஞ்சப்படல்
3.காற்றுச் சிற்றறைகளினுள் காபனீரொட்சைட் வாயு பரிமாற்றமடைதல்
4.ஊது பத்தியின் மணம் வளியினூடாகப் பரவிச் செல்லல்


32) தலைமயிர்ப் பூச்சுத் திராவகம் தயாரிக்கச் சிறந்த மூலகம் எது?
1. C 2. F 3. P 4. S

33) ஒளித்தொகுப்பின் பக்க விளைபொருளான $O_2$ எதன் பிரிகையால் தோன்றுகிறது?
1. காபனீரொட்சைட் 2. சூரியஒளி 3. குளுக்கோசு 4. நீர்

34) உணவுப்பொருட்கள் கொண்ட பொதிகளினுள் நைதரசன் வாயு நிரப்பப் படுவதற்கான காரணம்,
1.அது மணமற்றதாக இருத்தல்
2.உணவு ஒட்சியேற்றமடைவதை தடுக்கும்
3.உணவின் சுவையில் மாற்றம் ஏற்படுவதைத் தவிர்க்கும்
4.அது உணவைப் பேணத்தக்க வாயுவாகும்.

35) பின்வருவனவற்றுள் புற வெப்பத் தாக்கமாக அமையாதது
1. $C + O_2 \longrightarrow CO_2$
2. $CO(NH_2)_2 + H_2O \longrightarrow 2CO(NH_2)_2$
3. $C_6H_{12}O_6 + 6O_2 \longrightarrow 6CO_2 + 6H_2O$
4. $HCl + NaOH \longrightarrow NaCl + H_2O$

36) கடத்தியின் தடை சுற்றிற்கும் அக்கடத்தியின் குறுக்குவெட்டுமுகப்பரப்பு A யிற்கும் இடையேயான தொடர்பைக் காட்டும் வரைபு



1. 2. 3. 4.

37) அரியத்தின் ஒளிமுறிவு தொடர்பான பின்வரும் கூற்றுக்களில் சரியானது எது?
1.சிவப்பு நிறக்கதிர் குறைந்த விலகலடையும்.
2.ஊதா நிறக்கதிர் குறைந்த விலகலடையும
3.சிவப்பு நிறக்கதிர் கூடிய விலகலும், ஊதா நிறக்கதிர் குறைந்த விலகலும் அடையும்
4.சிவப்பு நிறக்கதிர் குறைந்த விலகலும், ஊதா நிறக்கதிர் கூடிய விலகலும் அடையும்.

38). திரவ அமுக்கம் தங்கியுள்ள காரணிகள்
1.திரவ அடர்த்தி, திரவ நிரலின் உயரம், புவியீர்ப்பு ஆர்முடுகல்
2.திரவ அடர்த்தி, திரவ நிரலின் உயரம், பாத்திர வடியம்
3.திரவ அடர்த்தி, பாத்திர வடிவம், புவியீர்ப்பு ஆர்முடுகல்
4.திரவ அடர்த்தி, திரவ நிரலின் உயரம், பாத்திரத்தின் அடிப்பரப்பு


39)பின்வருவனவற்றுள் கனிப்பொருள் அல்லாதது,
1.படிகம் 2. காரீயம் 3.தொலமைற்று 4. கருங்கல்

40) எமது பிரதேசத்தில் அதிகம் காணப்படும் கற்றாளைத் தாவரம் பற்றிய கூற்றுக்களில் தவறானது
1.இது ஒரு சதுப்பு நிலத்தாவரமாகும்
2.இது ஒரு மூலிகைத் தாவரமாகும்
3.இது இலைத்தொழில் தண்டாகும்
4.இதில் ஆவியுயிர்ப்பைக் குறைக்கும் பல இசைவாக்கங்கள் காணப்படுகின்றன.

(40 புள்ளிகள்)

# ஈராக்கிலிருந்து படைகள் வாபஸ்; ஒசாமாவைப் பிடிப்பது இலட்சியம்

## அமெரிக்க புதிய அதிபர் ஒபாமா சவால்



(வோஷிங்டன்)

“அமெரிக்க அதிபராக பதவி யேற்றதும் எனது முதன்மைப் பணி, சர்வதேச பயங்கரவாதியான ஒசாமா பின்லேடனைப் பிடிப்பது அல்லது கொல்வதுதான் என்று பாரக் ஒபாமா தெரிவித்தார்.

அமெரிக்க அதிபராக பராக் ஒபாமா அடுத்தாண்டு ஜனவரி மாதம் 5ம் திகதி பதவியேற்கிறார். வெற்றி பெற்ற பின்னர் ஒபாமா தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றுக்கு பேட்டியளித்தார். அதில் அவர் கூறியதாவது,

அமெரிக்காவில் அடுத்து அமைய விருக்கும் புதிய அரசின் முதன்மையான பணி அல்–குவைதா இயக்கத்தை அடியோடு ஒழிப்பதுதான். இந்த இயக்கத்தின் தலைவராக இருந்து செயல்படும் ஒசாமாவை மட்டும் குறிவைக்க வில்லை.

அமெரிக்க நிலைகளின் மீது குறி வைத்து தாக்குதல் நடத்துவதில் தலைவனாக செயல்படுவது ஒசாமா என்பது வெளிப்படை. எனவே ஒசாமாவை கூண்டோடு பிடிப்பது அல்லது கொல்வது தான் எமது அரசின் முக்கிய பணியாக இருக்கும்.

இதற்காக ஈராக்கில் இருக்கும்



அமெரிக்க படைகளை ஆப்கானிஸ்தான் அனுப்ப திட்டமிட்டுள்ளேன். எனது தேர்தல் பிரசாரத்தின்போது அளித்த உறுதி மொழிப்படி ஈராக்கில் இருந்து அமெரிக்க படைகளை திரும்ப அழைப்பேன். இது உடனடியாக நடக்கும்.

இது தொடர்பாக படைதளபதிகளையும் எனது தேசிய பாதுகாப்பு ஆலோசகருடன் கலந்து ஆலோசித்து இதற்கான பணிகளை செயல்படுத்துவேன். ஈராக்கில் அமெரிக்க படைகள் தற்போது செயல்படுத்திவரும் விசாரணை முறையை மாற்ற நடவடிக்கை எடுப்பேன். அமெரிக்கா யாரையும் துன்புறுத்தாது என்பதை மீண்டும் மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொருளாதார நெருக்கடியால் கடும் சவால்களை சந்திக்க வேண்டியுள்ளது. இதற்கான நடவடிக்கைகளை வகுப்பது தொடர்பாக அடுத்த இரண்டு மாதங்களுக்கு இதுதான் எனது வேலை.

குறிப்பாக வீட்டுக் கடன் வாங்கி அவதிப்படும் உரிமையாளர்கள் தொடர்ந்து வீடுகளில் குடியிருக்க செய்யும் வகையில் வங்கிகள், கடன் வழங்கிய நிறுவனங்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி முடிவு எடுப்பதற்கு வழிவகை செய்யப்படும். அது நான் பொறுப்பேற்ற பின் எடுக்கும் நடவடிக்கையாகும் இவ்வாறு ஒபாமா கூறினார். (ஓ–5)

## 10 இலட்சம் வெளிநாட்டவரை வேலைக்குச் சேர்க்க நடவடிக்கை

(லண்டன்)

வல்லரசான அமெரிக்கா உட்பட உலகின் பல்வேறு நாடுகளில் வேலையின்மை பிரச்சினை கவலை தரும் விதத்தில் அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

ஆனால், இங்கிலாந்தில் வேலைகளுக்கான ஆட்கள் பற்றாக்குறை கடந்த சில ஆண்டுகளாகவே நீடித்து வருகிறது.

புவியியல் ஆராய்ச்சியாளர்கள், கணிதம், அறிவியல், உயிரியல் பாடங்களுக்கான ஆசிரியர்கள் இரசாயனத் துறையியல் பட்டம் பெற்ற என்ஜினியர்கள், ஆடுகளை பராமரிப்பவர்கள், வெல்டர்கள், சமையல்காரர்கள் என மொத்தம் 10 லட்சம் பேருக்கான வெற்றிடம் காணப்படுவதாக குறிப்பிடப் படுகின்றது.

இந்நிலைமையை சமாளிக்க வெளிநாடுகளை சேர்ந்த 10 லட்சம் பேரை தேர்ந்தெடுக்க இங்கிலாந்து நாட்டை சேர்ந்த பல நிறுவனங்களும் உடனடி நடவடிக்கைகளில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

(ஓ–6)

## ஐக்கிய அரபு எமிரேட்ஸின் 1-வது செயற்கைக்கோள்

(துபாய்)

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாடு தன் முதல் செயற்கைக்கோளை விண்ணுக்கு செலுத்துகிறது. அடுத்த 6 மாதங்களில் இந்த செயற்கைக்கோள் கஜகஸ் தான் நாட்டில் உள்ள பைகானூர் ரொக்கெட் ஏவுதளத்தில் இருந்து விண்ணில் செலுத்தப்படுகிறது. இதற்கு ‘துபாய்சாட் - 1’ என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இதன் திட்ட அதிகாரியாக இருப்பவர் சலேம் அல் மார்ரி கூறுகையில் ‘இந்த செயற்கைக்கோள் ரூ. 32 கோடி செலவில் உருவாக்கப்பட்டுள்ளது.

இது கடந்த ஜூலை மாதமே தயாராகிவிட்டது. அதை விண்ணில் செலுத்துவது தான் தாமதமாகி வருகிறது’ என்று தெரிவித்தார்.

இதை விண்ணில் செலுத்துவதற்கு 32 லட்சம் ரூபாய் செலவு ஆகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஓ–6)

## வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகள்-2009

நேற்றைய தொடர்ச்சி...

மொத்த பெறுகைத் தேவைப்பாடு - 2009

| | ரூபா.மில் |
|---|---|
| அரசாங்க பெறுகையல்லாத மொத்தப் பெறுகைகள் | 907.8 |
| படுகடன் மீள் கொடுப்பனவு உள்ளடங்கலாக மொத்தக் கொடுப்பனவுகள் | 1,715.3 |
| முற்பணக் கணக்குகளுக்கான ஏற்பாடுகள் | 7.5 |
| ஆபத்து ஏற்பாடுகள் | 25.0 |
| அரசாங்கக் கணக்குகளில் பதிவு செய்வதற்குத் தேவையான மொத்தப் பெறுகைகள் | 840.0 |
| **அவற்றுள்** | |
| மொத்தப் படுகடன் மீள் கொடுப்பனவு | 475.0 |

பின்னிணைப்பு - III

### வரவு செலவுத் திட்டத்தின் சுருக்கம்


ரூ.பில்

| | 2007 | 2008 திருத்தப்பட்டது | 2009 வ.செ.திட்டம் |
|---|---|---|---|
| **மொத்த வருமானம்** | **565.05** | **709.35** | **855.00** |
| **வரி வருமானம்** | **508.95** | **643.48** | **779.14** |
| வருமான வரி | 107.17 | 138.29 | 166.70 |
| பொருட்கள் சேவைகள் மீதான வரிகள் | 328.60 | 396.74 | 464.78 |
| வெளிநாட்டு வர்த்தகம் மீதான வரிகள் | 73.17 | 108.44 | 147.66 |
| **வரியில்லாத வருமானம்** | **56.10** | **65.87** | **75.86** |
| **மொத்தச் செலவீனம்** | **841.60** | **1,016.70** | **1,191.67** |
| மீண்டெழும் | 622.76 | 743.39 | 823.51 |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 214.16 | 243.89 | 268.36 |
| வட்டி | 182.68 | 215.93 | 250.44 |
| உதவி தொகைகளும் மாற்றல்களும் | 147.45 | 170.41 | 196.02 |
| ஏனைய பொருட்களும் சேவைகளும் | 78.47 | 113.16 | 108.70 |
| **அரச முதலீடுகள்** | **229.27** | **278.19** | **370.77** |
| பிற | (10.43) | (4.88) | (2.61) |
| **வருமான மிகை (+) / குறை (-)** | **(57.71)** | **(34.04)** | **31.49** |
| **வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை** | **276.55** | **307.35** | **336.67** |
| **மொத்த நிதியிடல்** | **276.55** | **307.35** | **336.67** |
| **மொத்த வெளிநாட்டு நிதியிடல்** | 131.41 | 122.78 | 153.55 |
| தேறிய வெளிநாட்டுக் கடன்பாடுகள் | 100.91 | 97.73 | 123.02 |
| வெளிநாட்டு கடன்பாடுகள் | 165.02 | 189.04 | 222.52 |
| படுகடன் மீள் கொடுப்பனவுகள் | 64.12 | 91.32 | 99.50 |
| வெளிநாட்டுக் கொடைகள் | 30.51 | 25.06 | 30.53 |
| **மொத்த உள்நாட்டு நிதியிடல்** | **145.14** | **184.57** | **183.13** |
| தேறிய வங்கியல்லா கடன்பாடுகள் | 111.31 | 158.87 | 165.63 |
| தேறிய வெளிநாட்டு நாணயத்திலான உள்நாட்டு கடன்பாடுகள் | 3.40 | | |
| தேறிய வங்கிக் கடன்பாடுகள் | 12.37 | | |
| பிற | 18.06 | 25.70 | 17.50 |
| அரசிறை /மொ.உ.உ.% | 15.8 | 16.0 | 16.4 |
| வரி அரசிறை / மொ.உ.உ % | 14.2 | 14.6 | 14.9 |
| செலவினம் / மொ.உ.உ % | 23.5 | 23.0 | 22.8 |
| நடைமுறைச் செலவினம் / மொ.உ.உ % | 17.4 | 16.8 | 15.8 |
| அரச முதலீடு / மொ.உ.உ % | 6.4 | 6.3 | 7.1 |
| **வருமான பற்றாக்குறை (-) அல்லது மிகை (+) / மொ.உ.உ %** | **(1.6)** | **(0.8)** | **0.6** |
| **வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை / மொ.உ.உ %** | 7.7 | 7.0 | 6.5 |

(முற்றும்)

# எண்டவர் ரொக்கெட்டில் ஓட்டை; ஆபத்து ஏற்பட வாய்ப்பு இல்லை

## நாசா விஞ்ஞானிகள் தெரிவிப்பு



(வோஷிங்டன்)

அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான், உட்பட பல்வேறு நாடுகள் இணைந்து விண் வெளியில் சர்வதேச ஆய்வு கூடத்தை அமைத்து வருகிறார்கள். இந்த ஆய்வு கூடத்துக்கு அவ்வப்போது நிபுணர்களையும் தளபாடங்களையும் அமெரிக்காவின் ‘நாசா’ நிறுவனம் அனுப்பி வைக்கிறது.

கடந்த 2 நாட்களுக்கு முன்பு ‘எண்டவர்’ என்ற ரொக்கெட்டை அமெரிக்காவின் கென்னடி ஏவுதளத்தில் இருந்து அனுப்பி வைத்தனர். 7 விண்வெளி நிபுணர்களுடன் அனுப்பப்பட்ட இந்த எண்டவர் ரொக்கெட் நேற்று முன்தினம் வெற்றிகரமாக மிதக்கும் ஆய்வு கூடத்துடன் இணைந்தது.

அந்த ஆய்வுக் கூடம் பசுபிக்கடல் மட்டத்துக்கு மேலே 223 மைல் உயரத்தில் சுற்றிக் கொண்டிருக்கிறது.

ரொக்கெட்டில் சென்ற நிபுணர்கள் இணைப்பு பாதை வழியாக ஆய்வு கூடத்துக்குள் நுழை ந்தனர். அவர்களை அங்கு ஏற்கனவே இருந்த வீரர்கள் கட்டித் தழுவி வரவேற்றனர். ஆய்வு கூடத்துக்குள் எண்டவர் ரொக்கெட் நிபுணர்கள் தளபா டங்களையும் இறக்கினார்கள்.

விண்வெளியில் இந்த நிபுணர்கள் 4 தடவை இறங்கி நடக்க திட்ட மிட்டுள்ளனர்.

ஆய்வுக் கூடத்தில் பரா மரிப்பு பணிகள் எண்டவர் ரொக்கெட்டில் ஏற்பட்டுள்ள பழுதுகளை நீக்கும் பணி களையும் அவர்கள் மேற் கொள்வார்கள்.

பூமியில் இருந்து எண்டவர் ரொக்கெட் புறப்பட்டு சென்ற போது அதன் அடிப்பகுதியில் உள்ள வெப்ப தடுப்பு கருவியில் 18 அங்குல நீளம் 12 அங்குல அகலத்தில் ஒரு ஓட்டை விழுந்து விட்டது.

இதனால் அந்த விண்கலம் பூமிக்கு திரும்பும் போது அதன் வெப்பம் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. அது சரி செய்யப்பட்டு விடும் இதனால் ஆபத்து ஏதும் ஏற்பட வாய்ப்பு இல்லை என்று ‘நாசா’ நிறுவன விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். அதை சரி செய்வதில் நிபுணர்கள் இப்போது ஈடுபட்டுள் ளனர்.


இந்த விண்கலத்தில் 7 பேரில் ஒருவர் சாட்ரா மாக்னஸ் என்ற பெண். எண்டவர் ராக்கெட் இந்த மாத இறுதியில் பூமிக்கு திரும்பும் ஆனால் அந்த வீராங்கனை விண்வெளி ஆய்வுக்கூடத்திலேயே தங்கி விடுவார். (ஓ)

# வடக்கு கிழக்கு வைத்தியர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும்

## சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா

(கொழும்பு)

வடக்கு கிழக்கிலுள்ள வைத்தியர்கள் மற்றும் வைத்தியப் பணியாளர்களின் பாதுகாப்பு



உறுதிப்படுத்தப்படும் என சுகாதாரத்துறை அமைச்சர் நிமால் சிறிபாலடி சில்வா உறுதி மொழி வழங்கியுள்ளார்.

மட்டக்களப்பு வவுணதீவு நாவற்காடு வைத்தியசாலையில் பணியாற்றிய சிங்கள வைத்தியரான பத்மகுமார என்பவரும் இரண்டு வைத்தியசாலைப் பணியாளர்களும் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தனர்.

வைத்தியரின் படுகொலை குறித்து அதிர்ச்சி தெரிவித்திருக்கும் சுகாதாரத்துறை அமைச்சர் வடக்கு கிழக்கிலுள்ள வைத்தியர்கள் மற்றும் வைத்தியப் பணியாளர்களின் பாதுகாப்பை உறுதிபடுத்துவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுக்கும் எனத் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக எனது அமைச்சின் உயர் அதிகாரிகளுடனும் பாதுகாப்பு அதிகாரிகளுடனும் கலந்துரையாடியதுடன் வடக்கு கிழக்கு மாகாணங்களில் சுகாதாரப் பணிகள் சுமுகமாக முன்னெடுப்பதற்கான சூழ் நிலையை உறுதிப்படுத்துமாறு உத்தரவிட்டுள்ளேன் என அமைச்சர் கொழும்பு ஊடகமொன்றிடம் கூறியுள்ளார்.

வடக்கு கிழக்கிலுள்ள வைத்தியர்கள் அங்கிருந்து வெளியேறுவதால் இரு மாகாணங்களிலுமுள்ள வைத்தியர்கள் வெளியேறுவதற்கு விடுமுறைகளுக்கு அனுமதி வழங்க வேண்டாமென அமைச்சர் வைத்தியசாலைப் பணிப்பாளர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இரண்டு மாகாணங்களிலுமுள்ள வைத்தியர்களின் விடுமுறைகள் சுகாதார சேவைகள் செயலாளர் நாயகத்தாலேயே வழங்கப்படும் என அமைச்சர் அந்த ஊடகத்திடம் தெரிவித்தார்.

இதேவேளை அச்சுறுத்தல் நிறைந்த பகுதிகளிலிருக்கும் வைத்தியர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக பாதுகாப்பு அமைச்சு உறுதி மொழி வழங்கியிருப்பதாக அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் உறுப்பினர் வைத்தியர் உபுல் குணசேகர கூறியுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளரைச் சந்தித்து வடக்கு கிழக்கிலுள்ள வைத்தியர்கள் எதிர்நோக்கியிருக்கும் அச்சுறுத்தல்கள் குறித்துக் கலந்துரையாடியதாக அவர் கூறினார்.

அராங்கப் படைகளைத் தவிர வேறெந்த ஆயுதக் குழுவினரும் வைத்தியசாலை வளாகங்களுக்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உறுதிமொழி வழங்கினார் என்று அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து சிங்கள வைத்தியர்கள் வெளியேறுவதற்குத் தீர்மானித்திருப்பதாகத் தெரியவருகிறது. (ஓ-5)

## தகைமைச்சான்றிதழ்கள் வழங்குவதற்காக ஊர்திச்சாலைகளை பதிவு செய்தல்

(கொழும்பு)

வடமாகாண சபையின் எல்லைக்குள் வியாபாரப் பதிவினை கொண்டதும் பெறுமதி சேர்க்கப்பட்ட வரிக்கொடுப்பனவு செய்வதனை உறுதிப்படுத்தக்கூடிய சான்றிதழினை சமர்ப்பிக்கக்கூடியதுமான தனியார் துறை ஊர்திச்சாலைகளிடமிருந்தும், இலங்கைப் போக்குவரத்துச்சபை போன்ற ஏனைய ஊர்திச்சாலைகளிடமிருந்தும் பொதுச் சேவையில் ஈடுபடுத்தப்படும் பராஊர்திகளுக்கு (பஸ் வண்டிகள், லொறிகள்) தகைமைச்சான்றிதழ்கள் வழங்குவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கு தகுதியுள்ள ஊர்திச்சாலைகள் தமது விண்ணப்பங்களை டிசம்பர் மாதம் 15ஆம் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலிலோ அன்று நேரிலோ அந்தந்த பகுதி பிரதேச செயலாளருக்கு அனுப்பி வைக்குமாறு வடமாகாண பிரதம செயலாளர் எஸ்.ரங்கராஜா அறிவித்துள்ளார்.

தகைமைகள் பற்றிய விபரங்களை வலம்புரிக்காரியாலயத்தில் நேரில் பார்வையிடலாம். (ஓ)

## அநுராதபுரம் சிறைச்சாலையில் தமிழ் கைதிகள் உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

அநுராதபுர சிறைச்சாலையில் உள்ள தமிழ்ச் சிறைக்கைதிகள் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றில் ஈடுபட்டுவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 30ற்கு மேற்பட்ட தமிழ் சிறைக் கைதிகள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்து வருவதாக குறிப்பிடப்படுகிறது.

கடந்த சில தினங்களாக சிறைச்சாலை நிர்வாகம் தமக்கு பல்வேறு நெருக்கடிகளை கொடுத்துவருவதாக கைதிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

சக சிங்களக் கைதிகளைக்கொண்டு தாம் சோதனையிடப்படுவதாகவும் நுளம்புகள் மற்றும் மூட்டைடுப்பூச்சிகள் நிறைந்த ஓர் அறையில் நாம் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்ச்சிறைக்கைதிகள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு உறங்கு வதற்கு பாய்கள் வீழங்கப்படவில்லை எனவும் அனைத்து தமிழ்ச்சிறைக் கைதிகளும் வெறும் தரையில் உறங்கியதாக தெரிவிக்கப்படுகிறது. (ஒ-6)

# வாரம் ஓர் யாழ்ப்பாணத்து மூலிகை

## மருதானி / மருதோன்றி

Botanical Name -Lawsonia inermis
Family- Lythraceae
Engl - Henna plant
Sinh - Maritondi

நல்ல மணமுள்ள சிறிய மரமாகும். 6 மீற்றர் உயரம் வரை வளரக்கூடியது. சிலமுட்கள் கொண்டது. இலைகள் தோல் போன்றவை. முட்டை வடிவம் ஆப்பு வடிவ அடியும் கொண்டவை. மலர்கள் பசும்மஞ்சள் அல்லது வெண்மை நிறத்தினது. நறுமணம் கொண்டவை. நுனி மஞ்சரிகளாக அமைந்துள்ளன. கனிகள் அமுங்கிய கோண வடிவானவை. விதை பல எண்ணிக்கையிலானவை கோண வடிவின.



### பரம்பலும், இனவிருத்தியும்

பொதுவாக யாழ். மாவட்டத்தில் தரிசு நிலங்களில் பரம்பல் காணப்படுகின்றது. சிலர் இதனை வீட்டில் பயிரிட்டு வளர்க்கிறார்கள். இந்தியாவில், தலை முடிக்கு சாயம்(Henna Hair dye) தயாரிப்பதற்காக பெருந்தொகையாக பயிரிடப்படுகின்றது. விதைகள் மூலமும் வேர்க்கன்றுகள் மூலமும் இனவிருத்தி செய்யலாம்.

### மருத்துவப்பயன்கள்

☛ சங்ககாலத்திலேயே மருதானி இலைகளை எலுமிச்சம்பழச்சாற்றில் அரைத்து பெண்கள் கை, கால் விரல் நகங்களுக்கு பூசி அழகூட்டுவார்கள். இதில் மருத்துவக் குணமும் உண்டு. அதாவது இதைப்பூசினால் நகச்சுற்று வராது. மற்றும் நகங்களில் ஏற்படும் பங்கஸ் நோயும் வராது.

☛ ஆறாத வாய்ப்புண், அம்மைப்புண் ஆகிய வற்றிற்கு இதன் இலையை அரைத்து நீரில் கரைத்து வடித்து வாய்கொப்பளிக்கலாம். அரைத்து அம்பைப்புண்களுக்குப் பூசலாம். கட்டிகளுக்கும் அரைத்துப் பற்றிடலாம்.

☛ மருதோன்றி செடியின் வேர்ப்பட்டையை நிழலில் உலர்த்தி சருகுபோல உலர்ந்ததும் அதை உரலில் போட்டு இடித்து தூளாக்கி

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S)
சிரேஷ்டவிரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம், கைதடி

சல்லடையில் போட்டு சலித்து ஒரு சுத்தமான சிறு கிண்ணத்தில் தூளைப்போட்டு கொஞ்சம் தேங்காயெண்ணை சேர்த்து குழைத்து எந்தப் புண்ணாக இருந்தாலும் அதன் மேல் கோழி இறகைக் கொண்டு மருந்தை தடவி வந்தால் புண் சீக்கிரம் ஆறிவிடும். புண்ணை முதலில் கிருமிநீக்கி கொண்டு சுத்தம் செய்யத பின்னரே பூசவேண்டும்.

### பாத எரிச்சல் நீங்க

சிலருக்கு இரவு பகல் எந்த நேரத்திலும் பாதத்தில் ஒரே எரிச்சலாக இருக்கும். இதைப் போக்க மருதோன்றியிலையைத் தேவையான அளவு கொண்டுவந்து அதை அம்மியில் வைத்து எலுமிச்சம்பழச்சாறுவிட்டு மை போல அரைத்து படுக்கைக்கு போகுமுன் இரு பாதங்களிலும் பூசிக்கொண்டு படுத்து இரண்டு மணி நேரம் கழித்து வெந்நீர் விட்டு மருந்தைக் கழுவி விட்டு மறுபடிபடுத்துக்கொள்ள வேண்டும். இவ்விதம் தொடர்ந்து செய்ய பாத எரிச்சல் நீங்கும்.

### முடிவளர, நரை மாற

இரும்பு வாணலியில் தேங்காய் எண்ணெய் 500 மி.லி. விட்டு இதன் இலை 100 கிராம் போட்டு பொரித்து எடுக்கவும் இலையின் சாறு எண்ணெயில் சேர்த்து சிவப்பாகமாறிவிடும். நறுமணத்திற்காக 10 கிராம் சந்தனத்தூள் போட்டுக்காய்ச்சலாம். இந்தத் தைலத்தை நாளும் தலைக்குத் தேய்க்க முடி வளரும் நரை மாறும்.

மருதோன்றி இலை, வெள்ளைக் கரிசாலை இலை, கறிவேப்பிலை இலை இலைகளை சம எடையாக சேகரித்து நன்கு நிழலில் உலர்த்தி, இடித்து, பொடித்து, சல்லடையில் போட்டு சலித்து வைத்துக்கொள்ளவும். தலைமுடியை கறுப்பாக்க செயற்கையாக பயன்படுத்தும் சாயப்பொருளுக்கு பதிலாக (Hair dye) இப்பொடியை வெந்நீரில் அல்லது தேயிலைச் சாயத்தில் ஊறவைத்து (1/2 மணி நேரம்) தலைக்கு பூசி ஒரு மணிநேரம் சென்றபின்பு தலைமுழுகி வர முடி நன்கு கறுப்பாக மாறும்.

### கால் ஆணி மறைய

மருதோன்றி நிலையில் கைப்பிடியளவு கொண்டுவந்து மஞ்சள் வசம்பு ஒவ்வொன்றும் 25 கிராம் அளவு வீதம் சேர்த்து மை போல அரைத்து இரவு வேளையில் கால் ஆணியிருக்கும் இடத்தில் வைத்து மேலே ஒரு வெற்றிலையை தணலில் வதக்கி கட்டி வந்தால் கால் ஆணி மறைந்துவிடும். கால் ஆணி விழும் வரை தொடர்ந்து பயன்படுத்தி வரலாம்.

### அதிக அளவில் வெளியேறும் சிறுசீரை கட்டுப்படுத்த

இதற்கு மருதோன்றி இலையை ஆய்ந்து அம்மியில் வைத்து மைபோல அரைத்து உருண்டையாக எடுத்து அரை டம்ளர் காய்ச்சிய பசுவின் பாலில் கலந்து கொடுக்க வேண்டும். இவ்வாறு மூன்று நாட்கள் கொடுக்கலாம். தினசரி புதிய இலையை பயன்படுத்தி அரைக்க வேண்டும்.

சில ஆண்களுக்கு சிறுநீர் வெளியேறும் பொழுது முன்னதாகவோ பின்னதாகவோ ஆண் சக்தி சிறிதளவு வெளியேறும். இதற்கு மருதோன்றி இலைகளை இடித்து சாறு எடுத்து ஒரு தேக்கரண்டி சாற்றுடன் அதேயளவு சீனி சேர்த்து குழப்பி காலையில் கொடுத்து பின்னர் அரை டம்ளர் காய்ச்சிய பசுவின் பாலை அருந்தக்கொடுக்க வேண்டும் இவ்வாறு 7 நாட்கள் அருந்த சுகப்படும்.

### தலைவலிக்கு

தாங்கமுடியாத தலைவலி ஏற்பட்டிருக்கும் போது மருதோன்றி இலையை அம்மியில் வைத்து அரைத்து இரண்டு பக்கமாகவும் கனமாகப் பற்றுப்போட்டால் தலைவலி மறையும்.

## நாடாளுமன்றம் 17வது சீர்திருத்தத்தை அமுல் செய்ய தவறி விட்டது

### லக்ஸ்மன் கிரியெல்ல குற்றச்சாட்டு

(கொழும்பு)

17ஆவது அரசியலமைப்பு சட்டத்தை உரியமுறையில் அமுல்செய்யப்படாமை தொடர்பில் வெட்கப்படவேண்டும் என ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றிய கிரியெல்ல உயர் நீதிமன்றத்தின் கவனத்திற்கு இந்த விடயம் கொண்டு செல்லப்பட்ட போதும் நாடாளுமன்றம் 17ஆவது சீர்திருத்தத்தை அமுல்செய்ய தவறி விட்டதாக அவர் குற்றம் சுமத்தினார்.

இந்த சட்டத்தை அமுல்செய்ய வேண்டிய சபாநாயகரின் கடமை என்ற வகையில் அவரும் அதில் இருந்து தவறியுள்ளதாக லக்ஸ்மன் கிரியெல்ல சுட்டிக்காட்டினார். (ஒ-6)

## சுற்று நிருப அமுலாக்கலால் பல ஆசிரியர்கள் பாதிப்பு

(கொழும்பு)

இலங்கை ஆசிரியர் சேவை சுற்று நிருபங்களை அமுல்படுத்துவதில் வலயத் துக்கு வலயம் மாறுபட்ட நடைமுறைகளை பின்பற்றி வருவதால் பல ஆசிரியர்களுக்கு அநீதி இழைக்கப்படுவதாக புகார் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சுற்று நிருப நடைமுறையில் சில வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு விளக்கமின்மை நிலவுவதால் ஆசிரியர்களுக்கு நீதியை பெற்றுக்கொடுக்க முடியாதுள்ளது.

இதனால் மனித உரிமை ஆணைக்குழுவிற்கு பல முறைப்பாடுகள் கிடைத்து வருவதாக தெரியவருகிறது. (ஓ)

கேவலமான மனிதனாய் இருப்பதை விட ஒரு நல்ல குரங்காய் இருக்கலாம்.

– கிறீஸ்

வலம்புரி

## இன்று சரியாக இருப்பது நாளை பிழையாகவும் இருக்கலாம்

தமிழர்களின் விடிவின்மைக்கு அவர்களிடம் இருக்கக் கூடிய போட்டி, பொறாமை, காட்டிக் கொடுத்தல் ஆகிய இயல்புகளே காரணமாகவுள் ளன. இவ்வாறு கூறியவர் டாக்டர் மு.வரதராச னார்.

தமிழ் அறிஞரான வரதராசனாரின் மேற்போந்த கருத்தை ஆழமாக சிந்திக்கும் காலம் வந்துள் ளது. தமிழர்களைப் பிரித்து அந்த இனத்தை நலி வுறச் செய்வதில் வெற்றி கண்டவர்கள் தொடர்ந் தும் தமது தந்திரத்தைப் பிரயோகித்து வருகின்றனர்.

அதற்கு தமிழனம் தொடர்ந்தும் இரையாகி வரு வது தமிழர் செய்த ஊழ்வினைப் பயனோ என்று எண்ணத் தோன்றுகின்றது. எதுவாயினும் உல கில் தமிழினம் தனது தனித்துவத்தை, இழக்கா மல் இருக்க வேண்டுமாயின் அது இலங்கைத் தமி ழர்களின் அதிகாரத்துவமுடைய வாழ்விலேயே தங்கியுள்ளது.

இந்த உண்மையை தமிழகத்தில் உள்ளவர்க ளும் உணர்ந்து கொள்ள வேண்டும். அதேநேரம் தமிழர்களின் அடையாளத்தைக் காப்பாற்றக் கூடிய ஈழத் தமிழர்களின் வாழ்வியல் சிக்கல் நிறைந்ததாக, இருப்பை நிலைநிறுத்த முடியாத சூழமைவை கொண்டதாகக் காணப்படுகின்றது.

பூநகரியைக் கைப்பற்றி விட்டதற்கு அரசு வெற்றி கொண்டாடுகின்றது. பூநகரி வேற்று நாட் டிடம் இருந்த ஒரு பகுதியாயின் வெற்றியைக் கொண்டாடுவதில் நியாயம் இருக்க முடியும்.

ஆனால் மீட்கப்பட்ட பிரதேசம் இந்த நாட்டின் ஒரு பகுதி. அதிலும் தமிழ்மக்களின் பூர்வீக நிலம். எனவே தமிழர்களின் உரிமைப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் நிலைமை ஒன்று வருமாயின் தமிழர் களின் தாயகம் என்ற வகையில் பூநகரியை விட்டு படையினர் வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற் படும்.

அப்போது பூநகரியை மீட்டது – வெற்றியைக் கொண்டாடியது அனைத்துமே அர்த்தமற்றதாகிப் போகலாம். எனவே ஒருவர் எந்த விடயத்திலும் மகிழ்வடையலாம். வெற்றி கொள்ளலாம்.

ஆனால் அந்த விடயம் மீண்டுமோர் சந்தர்ப்பத் தில் அர்த்தமற்றதாக, தேவையற்ற காரியமாக அமையக் கூடாது. பூநகரியை மீட்டு விட்ட வெற்றி யை அனுஷ்டிக்கும்போது அதில் ஏற்பட்ட அழிவுக ளையும் ஒரு கணம் சிந்திக்க வேண்டும்.

சிங்கள–தமிழ் தரப்பில் எத்தனையோ இளை ஞர்கள் பலியாகியுள்ளனர். எந்தப் பக்கத்தில் இழப்பு ஏற்பட்டாலும் அது இலங்கைத் திருநாட்டுக்கு ஏற்பட்ட இழப்பு என்பதாக அமையும்.

அதைவிட வடபுலம் முழுவதிலும் படையின ரைக் குவித்து இடங்களைப் பாதுகாப்பதென்பது பொருத்தமற்ற செயல் என்பதுடன் நீண்ட காலத் துக்கு அதனைச் செய்யவும் முடியாது.

எனவே இலங்கையில் இன ஒற்றுமைப்பாட்டுக் கான வழிவகைகளை மேற்கொள்வதே சாலச் சிறப்புடையதாகும்.

# நவம்பர் மாத இடம்பெயர்ந்தோர் நிவாரண விநியோகத்தை 22ஆம் திகதி முதல் ஆரம்பிக்கவும்

## பிரதேச செயலாளர்களுக்கு அரச அதிபர் அறிவுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

கடந்த 2006 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 11 ஆம் திகதிக்கு முன் உள்ளூரில் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு மட்டும் வழங் கப்படும் இலவச உலர் உணவு நிவாரணம் நவம்பர் மாதமும் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக யாழ். அரச அதிபர் க. கணேஷ் சகல பிரதேச செயலாளர்களுக்கும் அறிவித்துள் ளார்.

இது தொடர்பில் பிர்தேச செயலாளர்களுக்கு யாழ். அரச அதிபரால் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள் ளதாவது , இத்தீர்மானத்திற்கமைவாக ஒரு அங்கத்தவருடைய குடும்பத்திற்கு 2.700கிலோ கிராம் அரிசி, ஒரு கிலோ மா, ஒரு கிலோ சீனி, 200கிராம் பருப்பு, ஆகியன வழங்கப்படும்.

இரண்டு அங்கத்தவர்களுடைய குடும்பம் ஒன்றிற்கு 6.125 கிலோ கிராம் அரிசி, 1.5 கிலோ கிராம் மா,1.5 கிலோ கிராம் சீனி,200கிராம் பருப்பு வழங்கப்படும்.

3 அங்கத்தவர் கொண்ட குடும்பம் ஒன்றிற்கு அரிசி 8.25கிலோ கிராம், மா 2.500கிலோகிராம், சீனி 1.500 கிலோ கிராம் பருப்பு 450 கிராம் என்ற அளவில் வழங்கப்படும்.

4 அங்கத்தவர்களுடைய குடும்பம் ஒன்றிற்கு அரிசி 8.300 கிலோ கிராம், மா 3 கிலோ கிராம், சீனி 2.5 கிலோ கிராம் பருப்பு–700 கிராம் ஆகியன வழங்கப்படும்.

5 மற்றும் அதற்கு மேற்பட்ட அங்கத்தவர்களுடைய குடும்பம் ஒன்றிற்கு அரிசி 11.125 கிலோ கிராம், மா 3.5கிலோ கிராம், சீனி 3 கிலோ கிராம் , பருப்பு 780கிராம் ஆகிய அளவு களில் வழங்கப்படும்.

இதற்கமைவாக விநியோகதிற்குரிய வழங்கல் கட்டளை கள் மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்தில் நேற்று முதல் வழங்கப்பட்டு வருகிறது.

எனவே பலநோக்கு கூட்டுறவு சங்கங்கள் வழங்கல் கட்ட ளைகளை பெற்று களஞ்சியத்திலிருந்து பொருட்களை உடன டியாக பெற்று கொள்ள நடவடிக்கை எடுப்பதுடன் எதிர்வரும் 22ஆம் திகதி சனிக்கிழமை முதல் நிவாரண விநியோகத்தை ஆரம்பித்து டிசம்பர் 12 ஆம் திகதிக்கு முன்னர் முடிவுறுத்துவ தனையும் உறுதிசெய்யவும். மேலும் 2008 ஒக்டோபர் மாத நிவாரண விநியோக முன்னேற்ற அறிக்கையினை வழங்கற் கட்டளையாக பெற்றுக்கொள்ளும் போது சமர்ப்பிக்க வேண் டும்.

அத்துடன் தரமான பொருட்களை சரியான பயனாளிக ளுக்கு சென்றடைவதனையும் உறுதிப்படுத்த வேண்டுமென அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஓ–5)

## அதிபர் சேவை தரம் 2:II

# வெட்டுப்புள்ளியை 200ஆகக் குறைக்க கல்வி அமைச்சரிடம் கோரிக்கை

(மட்டக்களப்பு)

அண்மையில் கல்வியமைச்சில் நடை பெற்ற இலங்கை அதிபர் சேவை தரம் 2:II இற்கான நேர்முகப் பரீட்சையின் போது விதிக்கப்பட்ட வெட்டுப் புள்ளியைக் குறைத்து கிழக்கு மாகாணத்தில் அதிபரில்லா பாடசாலைகளுக்கு அதிபர்களை நியமிக்க வேண்டு கிறோம்.

இவ்வாறு கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்தவிடம் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரட்ணம் மகஜர் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார். கிழக்கு மாகாணத்தில் சுமார் 30 வீத பாடசாலைகள் நிரந்தர அதிபரில்லாமல் இயங்கி வரு கின்றன. இந்நிலையில் அண்மையில் கல்வியமைச்சு நடத்திய அதிபர் சேவை தரம் 2:II க்கு தமிழர்– 227 பேரும் முஸ் லிம்கள்– 114 பேரும் தெரிவு செய்யப்படு வார்கள் எனக் கூறப் பட்டது.

ஆனால், இந்த 341 அதிபர்களும் கிழக்கு மாகாணத்திற்கு சற்றேனும் போதாது. எனவே வெட்டுப் புள்ளியை 200ஆகக் குறைத்து கூடுதல் அதிபர்களை நியமிக்க வேண்டுகிறேன். பல் லாண்டு காலத்திற்குப் பிறகு நடைபெறும் இந்நியமனத்தில் குறைந்தது 600 பேருக்காவது வாய்ப்பளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் என அக்கோரிக்கையில் மேலும் தெரி விக்கப்பட்டுள்ளது.

(ஓ–6)

# புதிய தேர்தலொன்றை நடத்துவதற்கு சிறந்த காலம் தோன்றி உள்ளது

## பொருளாதார ஆய்வாளர் கருத்து

(கொழும்பு)

புதிய தேர்தலொன்றை நடத்துவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்துக்கு தற்பொழுது சிறந்த காலம் தோன்றியிருப்பதாக பொருளாதார ஆய்வாளர் ஒருவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

கடந்த 25 வருடங்களுக்கு மேலாகத் தொடர்ந்துவரும் மோதல்களில் வெற்றிகளைப் பெற்றிருக்கும் தற்போதைய அரசாங்கம் தேர்தலொன்றை நடத்துவதற்கு சரியான தரு ணம் இதுவென பெயர் குறிப்பிடவிரும்பாத பொருளாதார ஆய் வாளர் ஒருவர் றொய்டர்ஸ் செய்திச் சேவைக்குக் கூறியுள்ளார்.

1983ஆம் ஆண்டு முதல் 20 முதல் வருடங்கள் ஆட்சியிலிருந்த ஐக்கிய தேசியக்கட்சியால் பயங்கர வாதத்தை தோற்கடிக்க முடியாமல் போனது. எனப் பெரும்பாலான இலங் கையர்கள் ஐ.தே.க. மீது குறைகூறு வது அவர் தெரிவித்துள்ளார்.

மோதல்கள் முடிவுக்குக் கொண்டு வரப்படுமாயின் பொருளாதாரத்தின் மீது கவனம் செலுத்தப்படும் அந்தப் பொருளாதார ஆய்வாளர் குறிப்பிட் டார்.

மோதல்களால் மோசமாகப் பாதிக் கப்பட்டிருக்கும் பொருளாதார அபி விருத்திக்கு ஐக்கிய தேசியக் கட்சி யை மக்கள் நாடுவார்கள். மோதல்க ளுக்குத் தற்போதைய அரசாங்கம் சிறந்தது. எனவும் பொருளாதார அபி விருத்திக்கு ஐக்கிய தேசியக்கட்சி சிறந்தது எனவும் மக்கள் நம்புகின்றனர். என அவர் றொய் டர்ஸ் செய்திச் சேவைக்குத் தெரிவித்தார்.

இதேவேளை உலகளாவிய ரீதியில் ஏற்பட்டிருக்கும் பொரு ளாதார நெருக்கடி இலங்கையின் பொருளாதாரத்தையும் தாக்குவதற்கு ஆரம்பித்திருப்பதாகவும். குறிப்பாக தேயிலை மற்றும் ஆடை ஏற்றுமதியிலும் வெளிநாட்டுக் கடன்களிலும் இதன் தாக்கம் தென்பட ஆரம்பித்திருப்பதாகவும் பொருளா தார ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

(ஓ–6)

## சுவாமி விவேகானந்தரின் ஆளுமை வளர்ச்சி செயல்புரியும் விதம்



எல்லாவற்றிலும் இறைவனை இணைத்துச் செயல்புரியுங்கள் என்று வேதாந்தம் சொல்கிறது. வாழ்க்கையைத் தெய்வீக மாக்கி, தெய்வமாக ஆக்கி இடைவிடாமல் வேலை செய்யுங்கள் . நாம் செய்ய வேண்டியதும் கேட்டுப்பெறவேண்டியதும் இவ்வளவு தான் என்பதை தெரிந்துகொள்ளவேண்டும். எங்கும் இறைவன் இருக்கிறார். அவ ரைத் தேடி நாம் எங்கே போவது ? ஒவ்வொரு செயலிலும் ஒவ்வோர் எண்ணத்திலும் ஒவ்வோர் உணர்ச்சியிலும் அவர் ஏற்கனவே உள் ளார். இதை உணர்ந்து செயல்புரிய வேண்டும். அது ஒன்றுதான் வழி. வேறு வழியே இல்லை. அப்போது தான் நமது கர்மபலன்கள் நம் மைக்கட்டுப்படுத்தாது.

போலி ஆசைகள் தான் நமது எல்லா தீமைகளுக்கும் துன்பங்களுக்கும் காரணம். என்பதைப் பார்த்தோம். அந்த ஆசைகளையே இறைவனின் மூலம் அவை துன்பத்தையோ தீமையையோ கொண்டு வராது.இந்த ரகசியத்தை அறியாதவர்களுக்கு அதை அறிந்து கொள்ளும் வரை உலக வாழ்க்கையே நரகமாகத்தான் இருக்கும்.தங்களுக்கு உள்ளும் தங்களைச் சுற்றியும் எல்லா இடங்களிலும் ஏல்லையற்ற ஆனந்த சுரங்கம் இருக்கிறது என்பது பலருக்குத் தெரியாது. அவர்கள் இன்னும் அதைக் கண்டுபிடிக்கவில்லை. நரக வாழ்க்கை என்பது என்ன? அறியாமைதான். நரகம் என்கிறது வேதாந்தம்.

# பாரதீய ஜனதா ஆட்சிக்கு வந்தால் 6 மாதத்தில் இலங்கைப்பிரச்சினைக்கு தீர்வு

## இல. கணேசன் தெரிவிப்பு

(சென்னை)

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக 25ஆம் திகதி நடாத்தப்படும் முழு அடைப்பு தேவையில்லைஎன்று தமிழக பாரதீய ஜனதா தலைவர் இல. கணேசன் கூறியுள்ளார். அவர் சென்னையில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தபோது கூறியதாவது.



இலங்கை அரசு விடுதலைப்புலிகளை அழிக்க வேண்டும் என்று ஆர்வம் காட்டுகிறது. ஆனால் அங்குள்ள தமிழர்கள் நலனில் எந்த அக்கறையும் காட்டவில்லை.

பாரதீய ஜனதா மத்தியில் ஆட்சியில் இருந்த போது இலங்கை அரசு எந்த ஒரு முடிவு எடுத்தாலும் இந்திய அரசிடம் ஆலோசனை கேட்டது.

ஆனால் இப்போது பிரதமர் மன்மோகன்சிங் பேச்சுக்கு மரியாதை இல்லை. இந்திய அரசையும் இலங்கை மதிக்கவில்லை. இந்திய அரசு உதவிக்காக கொடுத்த ரூ150 கோடிக்கு பாகிஸ்தானில் இருந்து ஆயுதம் வாங்கி இருக்கிறது. அங்குள்ள தமிழர்களை பாதுகாக்கவேண்டும் என்றால் இந்தியாவுக்கு வர விரும்புபவர்களை பத்திரமாக அழைத்து வந்து அனைத்து உதவிகளையும் செய்யவேண்டும்.

விடுதலைப்புலிகளை இலங்கை அரசு அடக் கிய பிறகு அவர்களை இலங்கைக்கு அனுப்பிவைக்கலாம்.

இலங்கை தமிழர் பிரச்சினைக்காக இந்திய கம்யூனிஸ்டு கட்சியும் . சில கட்சிகளும் சேர்ந்து 25ஆம் திகதி முழு அடைப்பு அறிவித்து இருப்பது தேவையற்றது. இதை பாரதீய ஜனதா ஆதரிக்கவில்லை.

பாரதீய ஜனதா ஆட்சிக்கு வந்தால் 6 மாதத்தில் இலங்கை தமிழர் பிரச்சினையை தீர்த்து வைப்போம் இவ்வாறு கூறினார்.(ஓ-5)

## நடிகை திரிஷாவுக்கு தங்க நந்திவிருது

தெலுங்கு திரை உலகில் சிறந்த நடிகர்கள் மற்றும் திரைப்படங்களுக்கு ஆந்திர மாநில அரசு சார்பில் ஆண்டு தோறும் தங்க நந்தி விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. அதன்படி "நுவ்வு" வஸ்தானன்டே நேனு வத்தன்டானா' என்ற தெலுங்கு படத்தில் நடித்ததற்காக நடிகை திரிஷாவுக்கு 2005 ஆம் ஆண்டுக்கான தங்க நந்தி விருது நேற்று முன்தினம் வழங்கப்பட்டது, 2006 ஆம் ஆண்டுக்கான சிறந்தநடிகர் விருது நடிகர் நாகார்ஜுனாவுக்கும், சிறந்த நடிகை விருது நடிகை நந்திதா தாசுக்கும், 2004ஆம் ஆண்டுக்கான சிறந்த இசையமைப்பாளர் விருது இளையராஜாவுக்கும் வழங்கப்பட்டன. 2006ஆம் ஆண்டுக்கான சிறப்பு நந்தி விருதை நடிகை ஜெனிலீயா பெற்றார் . குணச்சித்திர நடிகருக்கான விருது நடிகர் பிரகாஷ் ராஜுக்கு அளிக்கப்பட்டது. (ஓ-6)

## இலங்கையில் போர் நிறுத்தம் கோரி அரவாணிகள் உண்ணாவிரதம்

(சென்னை)

இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக சென்னை சேப்பாக்கத்தில் உண்ணாவிரதம் இருப்பதற்கு கமிஷனரிடம் அர்வாணிகள் அனுமதி கேட்டிருக்கிறார்கள்.

அகில இந்திய அரவாணிகள் கூட்டமைப்பை சேர்ந்த நிர்வாகிகள் கல்கி, பிரியா ஆகியோர் சென்னை பொலிஸ் கமிஷனர் அலுவலகத்தில் மனு ஒன்றை கொடுத்துள்ளனர்.

இலங்கை தமிழர்கள் தாக்கப்படுவதை நாங்களும் உணர்வுபூர்வமாக கண்டிக்கிறோம் .

இலங்கை போர் நிறுத்தம் அவசியம் என்பதை வலியுறுத்தி டிசம்பர் எட்டாம் திகதி உண்ணாவிரத போராட்டம் நடத்தப்போகிறோம் இதற்காக அனுமதி தரவேண்டும் என்று அந்த மனுவில் குறிப்பிட்டுள்ளனர்.

(ஓ-6)

## பாரதச் செய்திகள்

## இலங்கை தமிழர் படுகொலையை கண்டித்து மென்பொருள் பணியாளர்கள் போராட்டம்

(சென்னை)



இலங்கையில் தமிழர்கள் மீது நடத்தப்பட்டு வரும் தொடர் தாக்குதலை கண்டித்து அரசியல் கட்சியினர். நடிகர் -நடிகைகள் சின்னத்திரை கலைஞர்கள் கல்லூரி மாணவர்கள் உட்பட பல்வேறு தரப்பினரும் ஆர்ப்பாட்டம் உண்ணாவிரதம் மனித சங்கிலி நடத்தி வருகிறார்கள்.

இந்த நிலையில் நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்களும் இலங்கை தமிழர் படுகொலையை கண்டித்து சென்னையில் நேற்று மனித சங்கிலி நடத்தினர்.

நடிகர் சூர்யா அவரது சகோதரர் நடிகர் கார்த்தி ஆகியோர் இந்த மனித சங்கிலியைய தொடங்கி வைத்தனர்.

இதில் தர மணிடைடல்பார்க் வளாகம் மற்றும் அதைச் சுற்றி யுள்ள ஐ.டி. நிறுவனங்களில் பணி யாற்றும் தகவல் தொழில் நுட்ப(ஐ.டி) பணியாளர்கள் ஏராளமானோர் கலந்து கொண்ட னர்.

இந்திய அரசு இலங்கைக்கு அளித்து வரும் இராணுவ உதவிகளை உடனடியாக நிறுத்த வேண்டும் போர் நிறுத்தம் ஏற்பட இலங்கை அரசை வற்புறுத்த வேண்டும் என்று அவர்கள் கோஷமிட்டனர். (ஓ-6)

## இராணுவ உதவியை நிறுத்தக்கோரி சென்னை மேல் நீதிமன்றில் வழக்கு

இலங்கை இராணுவத்திற்கு மத்திய அரசு உதவி செய்வதற்கும் பயிற்சி அளிப்பதற்கும் தடை விதிக்க வேண்டும். இலங்கை இராணுவம் தமிழக மீனவர்களை சுட்டு கொல்வதற்கும் நடவடிக்கை எடுக்கும்படி மத்திய அரசுக்கு உத்தரவிட வேண்டுமென்று உயர் நீதிமன்றில் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வேலூர் மாவட்டம் ராணிபேட்டையை சேர்ந்த எஸ். மோகன் சுகுமார் என்பவர் பொது நலன் கருதி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். இந்த மனு தலை மை நீதிபதி ஏ. கே. கங்குலி நீதிபதிஇப்ராகிம் கலிபுல்லா ஆகியோர் முன்பு விசாரணைக்கு வந்தது. இந்த வழக்குமீண்டும் எதிர்வரும் 24 ஆம் திகதி விசாரணைக்கு வருகிறது. (ச- 5)

## 28 தமிழக மீனவர்கள் கடற்படையினரால் கைது

(இராமேஸ்வரம்)

தமிழக மீனவர்கள் 28 பேரை இலங்கை கடற்படையினர் நேற்று காலை சிறைபிடித்து சென்றுள்ளனர்.

புதுக்கோட்டை ஜெகதாபட்டினத்தை சேர்ந்த 28 மீனவர்கள் 7 படகுகளில் கடலுக்குள் மீன் பிடிக்க சென்றனர். அவர்களை இலங்கை கடற்படையினர் சிறை பிடித்து சென்றுள்ளனர்.

ஒரே சமயத்தில் 28 மீனவர்களை இலங்கை கடற்படையினர் பிடித்து சென்றுள்ளதால் ஜெகதாபட்டினத்தில் பதற்றம் நிலவுகிறது.

மீனவர்களின் உறவினர்கள் பிடிபட்ட மீனவர்களை மீட்க கோரி அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஓ-6)



இலங்கை தமிழர்களை பாதுகாக்கவும் போர் நிறுத்தம் செய்யவும் மத்திய அரசை வலியுறுத்தி இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில தலைவர் தா. பாண்டியன் தலைமையில் சென்னையில் நடந்த அனைத்துக்கட்சி கூட்டத்தில்....

# பஸ்களில் டீசலுக்கு பதில் ஹைட்ரஜன்; இஸ்ரோ விஞ்ஞானிகள் சாதனை

(பெங்களூர்)

சுற்றுச்சூழலை மாசுபடுத்தும் டீசலுக்குப் பதிலாக ஹைட்ரஜனை பஸ்களில் எரிபொருளாகப் பயன்படுத்தும் புதிய தொழில்நுட்பத்தை இஸ்ரோ விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

இந்தத் தகவலை பெங்களூரில் இஸ்ரோ தலைவர் ஜி மாதவன் நாயர் (படம்) செய்தியாளர்களிடம் திங்கட்கிழமை தெரிவித்தார் அவர் மேலும் கூறியதாவது,

ராக்கெட்டுகளை விண்ணில் செலுத்துவதற்காக இந்திய விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ள கிரையோஜெனிக் என்ஜின் தொழில்நுட்பத்தைப் போன்ற நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி பஸ்களை இயக்குவதற்கான எரிபொருளாக ஹைட்ரஜனைப் பயன்படுத்தும் முறையை அவர்கள் கண்டு பிடித்துள்ளனர்.

இப் புதிய தொழில்நுட்பம் மூலம் ஹைட்ரஜன் எரிபொருள் செல்கள் தயாரிக்கப்படும். இதன் மூலம் கிடைக்கும் எரிசக்தி மூலம் பஸ்கள் இயக்கப்படும்.

புதிய ஹைட்ரஜன் எரிபொருள் மூலம் தற்போதைய சுற்றுச்சூழல் மாசுப்படுதல், கரியமில வாயு வெளிப்பாடு, புவி வெப்பமடைதல் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது.

இந்த ஹைட்ரஜன் எரிபொருள் செல்களை உருவாக்கும் பணியை கடந்த இரண்டு ஆண்டுகளாக இஸ்ரோ விஞ்ஞானிகள் மேற்கொண்டுவந்தனர் அவர்களுடைய அயராத முயற்சிக்கு இப்போது பலன் கிடைத்துள்ளது இது எரிபொருள் துறையில் ஒரு புதிய சாதனை என்றே கருதலாம்.

அநேகமாக வருங் காலத்தில் முக்கிய எரிபொருளாகக்கூட ஹைட்ரஜன் மாறிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரவ ஹைட்ரஜனை எரிபொருளாகக் கையாளுவதற்கு புதிய தொழில்நுட்பத்தை இஸ்ரோ விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர். அடுத்து அதை பஸ்களில் பொருத்துவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஹைட்ரஜன் செல்களை வடி வமைக்கும் பணி முடிவடைந்துவருகிறது இவ்வாறு



மாதவன் நாயர் கூறினார்.

அடுத்து இஸ்ரோவின் கௌரவச் செயலரும் ஹைட்ரஜன் செல் ஆய்வுத் திட்டக் குழுவின் தலைவருமான வி.ஞானகாந்தி கூறியதாவது, ஹைட்ரஜன் எரிபொருள் செல்களை உருவாக்கி அவற்றை பஸ்களை இயக்கப் பயன்படுத்துவது குறித்த ஆய்வுக்காக இஸ்ரோவும் டாடா மோட்டார் நிறுவனம் 2006ஆம் ஆண்டில் ஓர் உடன்பாட்டைச் செய்து கொண்டன. அப்போது முதல் நடைபெற்று வரும் ஆய்வுப் பணிகள் மூலம் இப்போது ஹைட்ரஜன் செல் உருவாக்கப்பட்டுள்ளது. (ஓ-6)

# 8 அணிகள் மோதும் சம்பியன்ஸ் லீக் இருபது-20 தொடர் டிசம்பர் 5 ஆரம்பம்

(சென்னை)

கடந்த மார்ச்–ஏப்ரல் மாதம் நடைபெற்ற ஐ.பி.எல். 'இருபது- 20' கிரிக்கெட் போட்டி ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றது. இப்போட்டி மூலம் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை கோடிக்கணக்கான பணத்தை அள்ளிக்குவித்தது.

இதைத்தொடர்ந்து சம்பியன்ஸ் 'லீக்' கிரிக்கெட் போட்டித்தொடரை நடத்த இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை முடிவு செய்தது. அதன்படி இத் தொடர் அடுத்த மாதம் 3ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை நடக்கிறது. மும்பை, பெங்களூர், சென்னை ஆகிய 3 நகரங் களில் இத்தொடர் நடைபெறும்.

இத்தொடர் 30கோடி ரூபாபரிசு தொகை கொண்டது. இதில் இருந்து கிடைக்கும் பணம் இந்தியா, அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா ஆகிய 3 நாட்டு கிரிக்கெட் சபைகளுக்கு இணைந்து பகிர்ந்தளிக்கப்படும்.

இதில் 8 அணிகள் பங்கேற்கின்றன. அவை 2 பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளது. ஐ.பி.எல். போட்டியில் 2ஆவது இடத்தை பிடித்த சென்னை சுப்பர் கிங்ஸ், மிடிலக்ஸ் (இங்கிலாந்து), விக்டோரியா, (அவுஸ்திரேலியா), ரைட்டான்ஸ் (தென்னாபிரிக்கா), ஆகிய அணிகள் 'ஏ' பிரிவிலும், ஐ.பி.எல். போட்டியில் சம்பியனான ராஜஸ்தான் றோயல்ஸ், மேற்கு அவுஸ்திரேலியா (அவுஸ்திரேலியா), சியால்கோட் ஸ்டாலியன்ஸ் (பாகிஸ்தான்), டொல்பின்ஸ் ஆகிய அணிகள் 'பி' பிரிவிலும் இடம் பெற்றுள்ளன.

ஒவ்வொரு அணியும் மற்ற அணியுடன் தலா ஒரு முறை மோதும். 'லீக்' சுற்றில் புள்ளிகள் அடிப்படையில் இரண்டு பிரிவிலும் முதல் இரண்டு இடங்களை பிடிக்கும் அணிகள் அரை இறுதிக்கு தகுதி பெறும். சென்னையில் டிசம்பர் 5ஆம் திகதி முதல் இத்தொடர் நடக்கிறது. 5 லீக் ஆட்டமும், 2ஆவது அரை இறுதியும், இறுதிப் போட்டியும் சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடைபெறும்.

இந்தப் போட்டியில் விளையாடும் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. ஹைடன், மைக்கெல் ஹசி, முரளிதரன், அல்பி மோர்கல், நிற்னி ஆகிய வெளிநாட்டு வீரர்கள் ஆடுவது உறுதியாகி விட்டது. வெஸ்சல்சின் பயிற்சியாளர் ஒப்பந்தம் நீடிக்கப்படவில்லை. இதனால் தொடக்க வீரராக ஆடிய நியூசிலாந்து முன்னாள் அணித்தலைவர் ஸ்டீபன் பிளமிங் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

சென்னை சுப்பர் கிங்ஸ் அணி வருமாறு: தோனி(அணித்தலைவர்), ஹைடன், மைக்கெல்ஹசி, (அவுஸ்ரேலியா), அல்பிமோர்கல், நிற்னி (தென்னாபிரிக்கா), முரளிதரன், கபுகெந்தர (இலங்கை), சுரேஷ் ரெய்னா, அருண் கார்த்திக், பட்டேல், அஸ்வின், எல்.பாலாஜி, கோனி, தியாசி, பயிற்சியாளர் பிளமிங்.

இதேவேளை சம்பியன் 'இருபது–20' கிரிக்கெட் இறுதிப்போட்டி டிசம்பர் 10ஆம் திகதி நடக்கிறது. அதற்கு மறுநாள் (11ஆம் திகதி) இந்தியா– இங்கிலாந்து மோதும் முதல் டெஸ்ட் அகமதாபாத்தில் தொடங்குகிறது. சென்னை சுப்பர் கிங்ஸ் இறுதிப் போட்டியில் நுழைந்தால் தோனி அகமதாபாத் செல்வதில் தாமதம் ஏற்படும். இதனால் இந்த டெஸ்ட் போட்டியை ஒரு நாளைக்கு (டிசம்பர் 12ஆம் திகதி) தள்ளி வைக்குமாறு இந்திய கிரிக்கெட் சபை கேட்டுக் கொண்டுள்ளதாக இங்கிலாந்து அணி தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இது குறித்து இன்னும் தனது முடிவை இங்கிலாந்து அணி தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# ஒருநாள் தொடரை முழுமையாக வெல்வோம்

## யூசுப்பதான் நம்பிக்கை

(இந்தூர்)

இங்கிலாந்துக்கு எதிரான 2ஆவது ஒரு நாள் போட்டியில் 7ஆவது வீரராக களம் இறங்கிய யூசுப் பதான் தனது அதிரடி ஆட்டத்தின் மூலம் அசத்தினார். 29 பந்தில் 4 சிக்சர், 2 பவுண்டரி அடித்து அரைசதம் எடுத்தார். கடைசி ஓவரில் அவர் அடித்த 2 சிக்சர் மிகவும் அபரமாக இருந்தது.

யூசுப் பதானுக்கு நேற்று முன்தினம் 27 ஆவது பிறந்தநாள். பிறந்த நாளில் தனது முதல் அரை சதத்தை அதிரடியாக எடுத்தது முக்கியமானது. இப்போட்டி குறித்து யூசுப்பதான் கூறியதாவது:

எனது ஆட்டம் எனக்கும், எனது அணிக்கும் முக்கியத்துவம் பெற்றது. என் மீது மூத்த வீரர்கள் அனைவரும் மிகுந்த நம்பிக்கை வைத்துள்ளார். ஒவ்வொருவரும் வெற்றிக்கு முக்கிய பங்கு வகித்தனர்.

இந்த வெற்றி எங்களது திறமை மீது அதிக நம்பிக்கை ஏற்படுத்தி உள்ளது. எங்களால் 7 போட்டியிலும் (7–0) இங்கிலாந்தை தோற்கடிக்கமுடியும். முதல் முதலாக 50 ஓட்டங்கள் எடுத்ததை பிறந்தநாள் பரிசாக கருதுகிறேன். இவ்வாறு அவர் கூறினார்.

# ஐ.சி.சி தரவரிசையில் இந்தியா முன்னேற்றம்

(டுபாய்)

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) ஒருநாள் கிரிக்கெட் போட்டிக்கான தரவரிசையை வெளியிட்டது. தற்போது நடந்து வரும் இந்தியா–இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான முதல் இரண்டு ஒரு நாள் போட்டியில் இந்தியா அபார வெற்றி பெற்றதை அடுத்து 5ஆவது இடத்திலிருந்து 3ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

ஒருநாள் துடுப்பாட்டவீரர்களுக்கான தரவரிசையில் தொடர்ந்து இரண்டு போட்டியிலும் சதம் கடந்த யுவராஜ் 11 இடங்கள் முன்னேறி 6ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

இந்திய துடுப்பாட்ட வீரர் தோனி 784 புள்ளிகளுடன் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளார். நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் 11ஆவது இடத்திலும், காம்பீர் 22ஆவது இடத்திலும் உள்ளனர். பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசையில் சகீர்கான் 12ஆவது இடத் தில் உள்ளார்.

இவரை அடுத்து ஹர்பஜன் 22ஆவது இடத்தில் உள்ளார். அவுஸ்திரேலியாவின் பிரக்கன் 755 புள்ளிகளுடன் தொடர்ந்து முதல் இடத்தில் உள்ளார். மேற்கிந்தியதீவு களுக்கு எதிரான ஒருநாள் தொடரை பாகிஸ்தான் 3–0 என கைப்பற்றியதன் மூலம் 4ஆவது இடத் திற்கு முன்னேறியுள்ளது. அவுஸ்திரேலியா தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது.

# அடிகாயங்களுடன் சடலம் மீட்பு

பனை தென்னைவளப் பணியாளர் ஒருவர் அடிகாயங்களுடன் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த இரு நாட்களாக காணாமல் போன இவர் நேற்றுக்காலை மனோகராச் சந்தியிலுள்ள பனை தென்னைவள அலுவலகத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டதாக விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது.

கந்தர்மடத்தைச் சேர்ந்த வேலாயுதபிள்ளை உதய சூரியன் (வயது 44) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார். இச்சம்பவம் தொடர்பாக ஊர்காவற்துறை நீதிவானும் யாழ். மேலதிக நீதிவானுமாகிய ஜோய் மகாதேவன் விசாரணையை மேற்கொண்டார். (ச–49)




# தோழர் பத்மநாபா பிறந்த நாள் நினைவு....

1951 நவம்பர் 19ம் நாள் காங்கேசன்துறையில் ஒரு நடுத்தரக் குடும்பத்தில் தோழர் பத்மநாபா பிறந்தார். வசதியான குடும்பச் சூழ்நிலைகள் அவருக்கிருந்த போதும் நடுத்தரவர்க்கத்திற்கே உரிய சுயநல வாழ்வியல் கண்ணோட்டத்தை தவிர்த்து பொது வாழ்வில் ஈடுபட்டார்.

1972இல் தோழர் நாபா மற்றும் அவர் தம் தோழர்களாலும் உருவாக்கப்பட்ட தமிழ் மாணவர் பேரவை சர்வதேச கண்ணோட்டத்துடன் தேசியப்பிரச்சினையை அணுகும் கொள்கை வழியை கடைப்பிடித்தது.

1973இல் கொழும்பில் பெற்றோருடன் தங்கியிருந்த தோழர் நாபா தென்னிலங்கை சிறைகளில் அடைக்கப்பட்ட மட்டக்களப்பு, திருமலை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களை சேர்ந்த தமிழ் இளைஞர்களின் பெற்றோர்களுக்கு உதவுவதில் முன்னின்றார்.

1974இல் தமிழாராட்சி மாநாட்டின் பணிகளுக்காக சிவகுமாரன் தலைமையில் அமைக்கப்பட்ட தொண்டர் படையில் தோழர் நாபாவும் ஒருவராயிருந்தார்.

1976 ஜுன் மாதம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விடுதலையான சில நாட்களில் தோழர் நாபா கணக்கியல் துறையில் கல்வி கற்பதற்காக அவரது பெற்றோரால் இங்கிலாந்திற்கு அனுப்பிவைக்கப்பட்டார். ஆனால் அவர் அங்கு செயற்பட்டுக்கொண்டிருந்த ஈழப்புரட்சி அமைப்பாளர்களுடன் இணைந்து செயற்பட்டதுடன், லெபனான் சென்று ஆயுதப்பயிற்சியையும் பெற்றார்.

1977இல் இந்தியா சென்று அங்கிருந்து இலங்கை வந்தார். தனது அரசியல் நடவடிக்கைகளை தொடர்ந்தார்.

1978ஆம் ஆண்டு மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்கள் சூறாவளியால் பாதிக்கப்பட்ட வேளையில் அங்கு தனது தோழர்களுடன் சென்று தொண்டாற்றுவதில் முன்னணியில் இருந்தார்.

1981இல் நடைபெற்ற அமைப்பாளர் மாநாட்டில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் முன்னணி அமைப்புக்களான கிராமிய தொழிலாளர் விவசாயிகள் முன்னணி, ஈழமாணவர் பொது மன்றம், ஈழவாலிப முன்னணி, ஈழ பெண்கள் விடுதலை முன்னணி போன்ற முன்னணி அமைப்புக்களுக்கும் இராணுவப் பிரிவான மக்கள் விடுதலை படைக்கும் தலைமை பொறுப்பை ஏற்றார்.

1984இல் நடைபெற்ற ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் 1வது காங்கிரசில் கட்சியின் செயலாளர் நாயகமாகத் தெரிவு செய்யப்பட்டார். ஈரோஸ், ரெலோ, ஈபிஆர்எல்எவ் ஆகிய இயக்கங்கள் இணைந்த ஈழ தேசிய விடுதலை முன்னணி (ஈ.என்.எல்.எவ்) என்ற ஐக்கிய முன்னணி உருவாவதற்கு பிரதான பங்கை வகித்தார். இந்த ஐக்கிய முன்னணியில் 1985இல் தமிழீழ விடுதலைப் புலிகளும் இணைந்து கொண்டனர்.

1988இல் இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் இடம்பெற்ற மாகாணசபைத் தேர்தலில் ஈபிஆர்எல்எவ் பெரும்பான்மை ஆசனங்களை பெற்றிருந்த போதும் முதலமைச்சர் பதவியை தான் ஏற்காது தோழர் வரதராஜப்பெருமாளுக்கு வழங்கியதுடன் தமிழ், சிங்கள, இஸ்லாமிய இனத்தவர்களை கொண்ட ஒரு கூட்டு மந்திரிசபையை அமைக்க இதய சுத்தியோடு செயற்பட்டார்.

1990 ஜுன் 19ம் திகதி தமிழகத்தின் சென்னை மாநகரில் வைத்து தோழர் பத்மநாபா படுகொலை செய்யப்பட்டார்.

அவரது பெருமை நீடித்து நிலவும், அவரது இலட்சியம் முன்கொண்டு செல்லப்படும்,
அவரால் விடப்பட்ட கடமைகள் நிறைவேற்றப்படும்.

பத்மநாபா ஈபிஆர்எல்எவ்.

(C1786)

# பூநகரியில் புலிகளுக்கு எதிரான போரில் 8 அதிகாரிகள் உட்பட 54 படையினர் பலி

## முன்னாள் அமைச்சர் தகவல்

(கொழும்பு)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பூநகரிப் பகுதியில் நடைபெற்ற மோதல்களில் 8 அதிகாரிகள் உட்பட 54 படையினர் கொல்லப்பட்டுள்ளனர். 350 பேர் காயமடைந்துள்ளனர் என சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மக்கள் பிரிவின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது, பூநகரியை மீட்கும் படையினரின் நகர்வுக்கு எதிராகத் தமிழீழ விடுதலைப்புலிகள் கடும் எதிர்த் தாக்குதலை நடத்தினர்.

இதில் படையினர் பலத்த இழப்புக்களைச் சந்தித்தனர். பூநகரிப் பகுதியில் கடைசி ஒரு நாள் நடைபெற்ற மோதல்களில் 8 அதிகாரிகள் உட்பட 54 படையினர் கொல்லப்பட்டனர். 350 படையினர் காயமடைந்தனர் என்று மங்கள சமரவீர மேலும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் சிறிலங்காவின் படைத்துறைப் பேச்சாளரிடம் ஊடகம் ஒன்று தொடர்பு கொண்டு கேட்டபோது, படை நடவடிக்கை எனில் இழப்புக்கள் ஏற்படுவது தவிர்க்கப்பட முடியாதது என்று தெரிவித்துள்ளதுடன் இதனை நிராகரிக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார். (ச-5)



## பிறந்தநாளைக் கொண்டாடுவதில்லை நடிகர் ரஜனி ரசிகர்களுக்கு அறிவிப்பு

இலங்கையில் போர் நடப்பதாலும் தமிழர்கள் தாக்கப்படுவதாலும் பிறந்தநாளை கொண்டாடப்போவதில்லை என்று அறிவித்ததோடு மட்டுமல்லாமல் அதிலேயே உறுதியாக இருந்தார் கமல்.

கமலஹாசனைத் தொடர்ந்து ரஜினிகாந்த்தும் இப்போது பிறந்தநாளை கொண்டாடப் போவதில்லை என்று அறிவித்திருக்கிறார்.

ரஜினி ரசிகர்கள் மன்றத்தின் நிர்வாகியும், ரஜினியின் நெருங்கிய நண்பருமான சுதாகர், ரஜினிகாந்தின் பிறந்தநாள் அடுத்தமாதம் 12 ஆம் திகதி வருகிறது. இந்த ஆண்டு பிறந்த நாளை வெகுவிமரிசையாக கொண்டாட வேண்டும் என்று ரசிகர்கள் விருப்பம் தெரிவித்தார்கள்.

ஆனால் இலங்கை தமிழர்கள் துன்பப்படும் வேளையில் பிறந்தநாள் கொண்டாடுவதை தவிர்க்கும்படி ரஜினிகாந்த் கூறியிருக்கிறார். இதுபற்றிய முறையான அறிக்கையை அவரே நேரடியாக வழங்க இருக்கிறார். இதனை ரசிகர்கள் புரிந்து கொண்டு ஒத்துழைப்பு அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம் என்றிருக்கிறார். (ச-5)

## தேசியப்...

அனைத்துத் தரப்பினரினதும் இணக்கப்பாடு தேவை. சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவையும் இதற்காகவே ஜனாதிபதி நியமித்துள்ளார்.

பிரிவினைவாதத்தை ஒழிப்பதற்கு ஏற்ற வழியை எங்கள் அனைவர் மத்தியிலும் ஏற்படும் இணக்கப்பாட்டின் மூலமே காண முடியும்.

யுத்த நிறுத்த உடன்படிக்கை மூலம் பிரிக்கப்பட்டிருந்த பிரதேசங்களை மீளக் கைப்பற்றுவதோடு அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கு அரசாங்கம் கட்டுப்பட்டுள்ளது.

இதற்கு எதிர்க்கட்சியின் இணக்கப்பாடும் அவசியமானதாகும். நாடாளுமன்றத்தில் எந்தப் பக்கத்தில் அமர்ந்திருந்தாலும் அனைத்து இனத்தவர்களுக்காகவும் அரசியல் தீர்வொன்றைப் பெற்றுக் கொடுக்க எதிர்க்கட்சித் தலைவர் உட்பட உறுப்பினர்கள் அனைவரினதும் இணக்கப்பாடு அவசியம் என அமைச்சர் போகொல்லாகம மேலும் தெரிவித்தார். (ச-5)

## அதிபர் சேவை தரம் 2-II

# நியமனக் கடிதங்கள் தபாலில் அனுப்பி வைப்பு

(கொழும்பு)

இலங்கை அதிபர் சேவை தரம் 2-II ற்கு இணைத்துக் கொள்ளப்பட்டவர்களுக்கான நியமனக் கடிதங்களைப் பெற்றுக் கொள்ளாதவர்களுக்கான கடிதங்கள் தபால் மூலம் அனுப்பி வைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக கல்வியமைச்சின் மேலதிக செயலாளர் கே.முகமட் தம்பி தெரிவித்தார்.

அண்மையில் நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டதற்கு அமைவாக 1800 பேருக்கான நியமனக் கடிதங்கள் வழங்குவதற்கான விழா நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்றது.

எனினும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் இந்நியமனக் கடிதங்களை போக்குவரத்துப் பிரச்சினை காரணமாக வழங்கப்படவில்லை. இந்நிலையிலேயே இவர்களுக்கான நியமனக் கடிதங்களை தபால் மூலம் அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்வியமைச்சின் மேலதிக செயலாளர் கே. முகமட்தம்பி தெரிவித்தார்.

அத்துடன் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த குறைந்தளவிலானவர்கள் இம்மாத ஆரம்பத்தில் கல்வி அமைச்சில் நடைபெற்ற சான்றிதழ் பரிசீலிக்கும் நேர்முகத் தேர்விற்கு சமுகமளிக்க முடியவில்லை.

இவர்களுக்கு அறிவிக்கப்பட்டதன் பிரகாரம் வடக்கு மாகாண கல்வியமைச்சின் ஊடாக வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மூலம் சான்றிதழ்களைப் பெற்று அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் கல்வியமைச்சின் மேலதிக செயலாளர் மேலும் குறிப்பிட்டார். (ச-5)

# கடையடைப்பு இரத்தானது

(சென்னை)

தமிழ்நாடு சென்னையில் நேற்று முன்தினம் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் எதிர்வரும் 25 ஆம் திகதி நடைபெறவிருந்த முழுக் கடையடைப்புப் போராட்டம் கைவிடப்பட்டதாக கம்யூனிஸ்ட் கட்சி நேற்று அறிவித்துள்ளது.

எனினும் அன்றைய தினம் அரச அலுவலகங்களுக்கு முன்பாக மறியல் போராட்டம் நடத்தவிருப்பதாக அறிவித்துள்ளனர். கடையடைப்புப் போராட்டத்தை மறுபரிசீலனை செய்யுமாறு பல கட்சிகளும் கோரிக்கை விடுத்ததன் பேரிலேயே இப் போராட்டத்தைக் கைவிட்டுள்ளதாக கம்யூனிஸ்ட் கட்சி தெரிவித்துள்ளது.

இதேவேளை நேற்று முன்தினம் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தமிழக முக்கிய கட்சிகளான தி.மு.க., அ.தி.மு.க. போன்ற கட்சிகள் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

## புலிகளைத்...

தடை செய்து விடும் என பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க எச்சரித் திருந்தார்.

இதேவேளை விடுதலைப்புலிகள் அமைப்பைத் தடை செய்யும் நோக்கம் எதுவும் அரசாங்கத்துக்கு இல்லை என கடந்த சில மாதங்களுக்கு முன்னர் பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல கூறியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ச-5)

## யாழ்.இளை...

வந்து மீண்டும் செல்வதற்காக கொழும்பில் தங்கியிருந்த வேளையில் இவர் காணாமல் போயுள்ளதாக மனித உரிமைகள் யாழ். அலுவலகத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொக்குவில் கிழக்கு காளி கோவிலடியைச் சேர்ந்த கந்தையா சீலன் (வயது-26) என்பவரே கொழும்பில் பழைய சோனகத் தெருவிலுள்ள தனியார் விடுதியில் தங்கிருந்த வேளையில் காணாமல் போனவர் ஆவார். (ச-5)

## யாழ்...

வெடிகணை, ஆட்லறி எறிகணை மற்றும் கனரக போர்க் கலங்களின் செறிவான சூட்டாதரவுடன் முன்னகர்வினைப் படையினர் மேற்கொண்டனர்.

இம் முன்னகர்வுக்கு எதிராக விடுதலைப் புலிகள் நேற்றுக் காலை 10.40 மணிவரை கடும் எதிர்ப்புத் தாக்குதலை நடத்திப் படையினரைப் பழைய நிலைக்கு விரட்டியடித்துள்ளனர் என்று விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

வட போர்முனையில் கடந்த மூன்று நாள்களாக நடைபெற்ற பெரும் மோதல்களில் படையினர் தரப்பில் 45 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 145 பேர் படுகாயமடைந்துள்ளனர். (ச-5)

## அரியநேந்திரன் எம்.பி...

நேந்திரன் அங்கு செல்லவில்லை.

அவர் தங்கியிருக்கும் மாதிவெலயில் உள்ள விடுதிக்கு நேற்றுக் காலை 10 மணியளவில் சென்ற பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் அரியநேந்திரனை அழைத்துச் சென்றனர்.

அழைத்துச் செல்லப்பட்ட அரியநேந்திரன் பயங்கரவாதத் தடுப்புத் தலைமை அலுவலகத்தில் கடுமையான விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார் என்று கூட்டமைப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக ஜேர்மனி செல்வதற்கு விடுதலைப்புலிகள் பணம் வழங்கினர் என்றும் விடுதலைப்புலிகளின் பிரமுகர்களின் அழைப்பில் அங்கு சென்றதாகவும் சந்தேகத்திற்கிடமான கேள்விகளைப் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் கேட்டதாகக் கூட்டமைப்புத் தகவல் மேலும் தெரிவிக்கின்றன.

வேலுப்பிள்ளை பிரபாகரன் தமிழர்களின் தலைவனா? என்றும் கேள்வி எழுப்பி, எங்கள் தலைவர் பிரபாகரன் என்று உங்கள் உரையில் எப்படிக் கூற முடியும் எனவும் கேள்வி தொடுத்தனர் என்று தெரிவித்த அரியநேந்திரன் தன்னால் வழங்கப்பட்ட பதில்கள் அனைத்தும் பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸாரினால் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

பிற்பகல் 3.30 மணி வரை விசாரணை இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## யுத்தத்தை நிறுத்துவதற்...

இலங்கைப் பிரச்சினைக்கு அரசியல் ரீதியாகத் தீர்வு காணப்பட வேண்டும். அந்த முயற்சியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் இணைத்துக் கொள்ள வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.

கடந்த வாரம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்தியாவுக்கு விஜயம் செய்த நிலையில் 3 நாள் பயணமாக கடந்த திங்கட்கிழமை புதுடில்லி சென்ற ரணில் விக்கிரமசிங்க இலங்கை நிலைவரம் தொடர்பாக அங்கு பல்வேறு தலைவர்களைச் சந்திக்கத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

திங்கட்கிழமை இரவு பாஜகவின் மூத்த தலைவர்களில் ஒருவரான யஷ்வந்த் சின்ஹாவைச் சந்தித்து இலங்கை நிலைவரம் குறித்து நீண்ட ஆலோசனை நடத்தினார். நேற்றுக் காலை பாஜகவைச் சேர்ந்த முன்னாள் வெளியுறவு அமைச்சரும் மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவருமான ஜஸ்வந்த் சிங்கைச் சந்தித்துப் பேசினார்.

பின்னர் செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்த ரணில் விக்கிரமசிங்கவிடம் விடுதலைப்புலிகள் போர்நிறுத்தத்திற்குத் தயார் என அறிவித்தாலும் போர்நிறுத்துவதற்கு வாய்ப்பில்லை என்று கடந்த வாரம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ புதுடில்லியில் திட்டவட்டமாக அறிவித்திருப்பது பற்றி கேட்டபோது,

ஜனாதிபதி ராஜபக்ஷவைச் சந்தித்து இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். இரண்டு பிரதான கட்சிகளும் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் இணைந்து செயற்பட வேண்டும்.

ஏற்கனவே அனைத்துக் கட்சிக் குழுவில் இடம்பெற்றுள்ள முஸ்லிம் கட்சிகளுடன் ஆலோசனை நடத்த வேண்டும். ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் உள்ளே கொண்டுவர வேண்டும்.

அதன் பிறகு இலங்கையில் அனைத்துச் சமூகத்தினரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வை எட்டுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டிய பிரச்சினை போரினால் இடம்பெயர்ந்த பொது மக்களைப் பாதுகாப்பது எப்படி என்பதுதான். அவர்களுக்கு எல்லா வசதிகளும் கிடைக்க வேண்டும் என்றார் ரணில் விக்கிரமசிங்க.

போர்நிறுத்தத்திற்கு தற்போது வாய்ப்பிருப்பதாகத் தான் எதிர்பார்க்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார். இந்திய வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜியைச் சந்திக்கத் திட்டமிட்டிருப்பதாகவும் பிரதமரைச் சந்திக்கும் திட்டம் எதுவும் இல்லை என்றும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார். (ச-5)

## நாயாறு கடற் பிரதேசத்...

தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாமல் 4 படகுகள் தப்பிச் சென்றதாகவும் அந்தப் படகுகள் மீது விமானப் படையினர் தாக்குதல் நடத்தியதாகவும் தெரியவருகின்றது.

தப்பிச் சென்ற 4 படகுகளும் தற்கொலைத் தாக்குதலுக்கான படகுகள் எனக் கடற்படைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்தத் தாக்குதலின்போது 6 கடற்புலிகள் கொல்லப்பட்டதாகவும் மேலும் பல கடற்புலிகள் காயமடைந்துள்ளதாகவும் புலிகளின் தகவல் பரிமாற்றத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த மோதலின்போது கடற்படையினருக்கு சேதம் எதுவும் ஏற்படவில்லை எனப் பாதுகாப்பு அமைச்சின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை முல்லைத்தீவு நாயாறு கடற்பரப்பிலுள்ள கறுப்புமுனை நோக்கி கடற்படைக் கொமாண்டோக்கள் நேற்று நடத்திய தாக்குதல் நடவடிக்கை தமிழீழ விடுதலைப்புலிகளின் கடற்புலிகளினால் முறியடிக்கப்பட்டுள்ளது.

இதில் கடற்படையினரின் படகுகள் சேதமாக்கப்பட்டுள்ளன என புலிகள் தெரிவித்துள்ளனர். கறுப்புமுனை நோக்கிக் கடற் படையின் கொமாண்டோக்கள் தமது நவீன அதிவேக ஆரோப் படகுகளிலும் நீருந்து விசைப் படகுகளிலும் வந்து தாக்குதல் நடவடிக்கையை நேற்றுக்காலை 6.15 மணியளவில் நடத்தின.

இரண்டு நீருந்து விசைப் படகுகளும் 12 ஆரோப் படகுகளும் இத் தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டன. இந் நடவடிக்கைக்கு ஆதரவாகத் தரைப்படையினர் எறிகணைத் தாக்குதலை செறிவாக நடத்த வான் படையின் மிக்-27 ரக வானூர்திகள் மற்றும் உலங்கு வானூர்திகள் ஆகியன இணைந்து தாக்குதலை நடத்தின.

இதற்கு மத்தியில் கடற்புலிகள் தீவிர எதிர்த் தாக்குதலை நடத்தினர். கடற்புலிகளின் எதிர்த் தாக்குதலில் கடற்படையின் கொமாண்டோக்கள் இழப்புக்களைச் சந்தித்துள்ளனர்.

சுமார் 45 நிமிடம் வரை நடைபெற்ற மோதலையடுத்து மூன்று சிறப்புப் படகுகள் சேதமாகிய நிலையில் கடற்படையினர் பின்வாங்கிச் சென்றுள்ளனர்.

கடற்புலிகள் எதுவித இழப்புகளுமின்றி தளம் திரும்பியுள்ளனர் என்று விடுதலைப் புலிகள் தரப்புத் தகவல்கள் தெரிவித்துள்ளன. (எ-5)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.11.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.